Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 17 (20.02.2003) வியாழக்கிழமை இதழ் :141

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து

SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.

ரா ம் கோ ரா ம் கோ

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து

(சி-553)

## மானிப்பாயில் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம்

# யாழில் விசாரணைகள் நடத்த உயர் இராணுவக் குழு வந்தது

## புலிகள் தரப்புடனும் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

**மானிப்பாய் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட இராணுவ உயர்மட்ட விசாரணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக நேற்று, இந்த விசாரணைக்குழு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததுடன் புலிகளையும் சந்தித்தது.**

மேஜர் ஜெனரல் ஜெயசுந்தர தலைமையிலான இக்குழுவில் மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன, கேணல் கதுருசிங்க, கேணல் தர்மரத்தின ஆகியோர் பங்கேற்றனர்.

நேற்றுமாலை யாழ்.போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இவ்விடயம் தொடர்பாக முக்கிய சந்திப்பொன்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையிலான குழுவினருக்கும் மேற்படி உயர்மட்ட விசாரணைக் குழுவினருக்கும் இடையில் நடைபெற்ற இச்சந்திப்பில் மானிப்பாய்ச் சம்பவம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

(க,லி)



விசாரணைக்கு வந்த இராணுவ உயர்மட்டக் குழு.

## விண்ணாணம் விநாசியர்



உப்படியே போனால் கந்த ரோடை, கந்தரோகம ஆனாலும் ஆச்சரியப்படாதையுங்கோ...!

# தமிழீழ தேசிய விளையாட்டு விழா கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்!

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடத்தப்படும் 'தமிழீழ தேசிய பெரு விளையாட்டுப் போட்டி - 2003' இன்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப வைபவமாக, கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இருந்து - மைதானம் வரையில் சாள்ஸ் அன்ரனிப் படைப் பிரிவினரும் மாலதி படையணியினரதும் அணிவகுப்பு முன்னே செல்ல, அதனைத் தொடர்ந்து நடுவர்கள் அலுவலர்களும் மற்றும் காவடி, தவில் கலைஞர்களும் ஊர்வலமாகச் செல்வர். இவர்களைத் தொடர்ந்து மாவட்ட ரீதியாக விளையாட்டு வீரர்கள் அணிவகுத்துச் செல்வர்.

இவ்விளையாட்டு விழா இரவு - பகலாகத் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறும். இவ்விளையாட்டுப் போட்டியில் வட - கிழக்கில் எட்டு மாவட்டங்களிலுமிருந்து தெரிவுசெய்யப்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்குபெற்றவுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில் ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்தும் 60 பேர் கலந்துகொள்வர் என தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார். ஆரம்ப வைபவத்தைத் தொடர்ந்து, இன்று மாலை கிளிநொச்சி 'ஏ' அணிக்கும் யாழ்ப்பாண அணிக்கும் மற்றும் வவுனியா- முல்லைத்தீவு 'ஏ' அணிகளுக்கும் இடையே உதைபந்தாட்ட போட்டிகள் நடைபெறும்.

## முன்னாள் பிரதேச செயலாளர் சந்திரராசா விபத்தில் மரணம்



வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியில் நேற்று மாலை நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், மூத்த சிவில் அதிகாரியான க.சந்திரராசா (63) ஸ்தலத்திலேயே மரணமானார்.

நேற்று மாலை 5 மணியளவில் யாழ். செயலகத்திலிருந்து தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இவர், எதிரே வாகனம் ஒன்றை முந்திக்கொண்டு வேகமாக வந்த மற்றுமோர் மோட்டார் சைக்கிளினால் நேருக்கு நேர் மோதுண்டார். இதன்போது இவரது (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி உட்பட மூவர் முகமாலை பகுதியில் கைது!

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் இராணுவ சோதனைச் சாவடி ஊடாக சென்று கொண்டிருந்த ஓட்டோ சாரதி ஒருவர் உட்பட மூன்று பேர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தினபோது மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரும் தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களுக்கு அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. (111)

## உயர்மட்ட கடற்படைக் குழு இந்தியாவுக்குப் பயணம்!



ரியர் அட்மிரல் வீரசேகர

இலங்கை கடற்படையின் தலைமையக கட்டளை அதிகாரி தலைமையிலான நான்கு அதிகாரிகள் கொண்ட உயர்மட்டக்குழு ஒன்று இன்று இந்தியா செல்கிறது.

கடற்படை தலைமையக கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான கடற்படை உயர்மட்டக் குழுவினர், இந்திய கடற்படை அதிகாரிகளுடன் இருதரப்புடன் சம்பந்தப்பட்ட பல விடயங்கள் குறித்து ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக் கடலில் இந்திய - இலங்கை (10 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தரோடையில் புதிய விகாரை; எதிர்த்து நேற்றுப் போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

கந்தரோடையில் புதிதாக பௌத்த விகாரை அமைப்பதைக் கண்டித்தும் இப்பௌத்த விகாரை அமைப்பதை நிறுத்தும்படியும் கோரி நேற்று கந்தரோடையில் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.



வலி-வடக்கு, வலி-தெற்கு பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணி, சுன்னாகம் ஸ்கந்தரோய் கல்லூரி முன்றிலிருந்து நேற்று காலை 10.45 மணியளவில் ஆரம்பமாகியது.

இதன்போது ஒலி பெருக்கி பொருத்தப்பட்ட வாகனம் முன் செல்ல, வலி- வடக்கு, வலி- தெற்கு பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவாளர்கள் உட்பட பல பிரமுகர்களும், பாடசாலை மாணவ, மாணவிகளும் பின்தொடர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து, சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மக்களும் சென்றனர். பல முச்சக்கர வண்டிகளும் இப்பேரணியில் அணிவகுத்துச் சென்றன.



ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புத்தர் சிலை

வலி-தெற்கு பிரதேச செயலகத்தை நண்பகல் 12 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி வந்தடைந்தது. அங்கு, கந்தரோடையில் பௌத்த விகாரை அமைப்பதை எதிர்த்து வலி-தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் குமாரவேல் (10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021-2223916, 0777-517019, 0. 505632, 074-612656, 01-390128.




கந்த்ரோடையில் ஆர்ப்பாட்டப் பேரணி



மாணவரின் ஆட்சேபம்.



நேற்று வெறிச்சோடிய சுன்னாகம்.



கண்டன மகஜர் கையளிப்பு.

நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

பிரசாந்த், சிம்ரன் நடித்த

ஜோடி

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி!

M.I. 2

(சி-544)

ராஜா யாழ்ப்பாணம்.

5 ஆவது வாரமாக



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

10.30, 2.30, 6.30

வசீகரா

(சி-545)

ரூபா

மனைப்பொருளியல் நிலையம்

புதிய வகுப்புகள் ஆரம்பம்: 20.02.2003 காலை 9.30 மணி

* கேக் ஐசிங்
* தையல்
* தலையலங்காரம்
* சமையற்கலை
* துணிகளுக்கு வர்ணம் தீட்டுதல்

*குறிப்பு:* பழைய மாணவிகள் - பரீட்சை, சான்றிதழ் வழங்கல் தொடர்பான கலந்துரையாடலுக்கு 23.02.2003 ஞாயிறு காலை 10 மணிக்குச் சமுகமளிக்கவும்.

தொடர்பு: ரூபா சத்தியமூர்த்தி,
41, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-603)

## அந்தியேட்டிக் கிரியை



**அமரர் ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்**

(ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர்)

## நினைவஞ்சலி



**திருமதி வைத்திலிங்கம் நவமணி**

04-02-1941 ⟵ மலர்வு ⟶ 15-12-1944

20-01-2003 ⟵ உதிர்வு ⟶ 11-11-1996

எமது தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை (21.02.2003) இடம்பெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சந்தை வீதி (சந்தைக்கு முன்பாக),
நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

- குடும்பத்தினர்.

## இன்றைய நாள் இனிய நாள்

**20-02-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- நன்மதிப்பு, ஆரோக்கியம், சிநேகிதருதவி, வாக்குவசீகரம், வெற்றி. |
| இடபம் | :- அவமானம், மனக்கவலை, தேகமெலிவு, நிலைபிரிவு, வயிறு, மார்பில் வலி. |
| மிதுனம் | :- பொருள் விருத்தி, தன தானிய லாபம், நற்குணம், ஆரோக்கியம். |
| கர்க்கடகம் | :- தூக்க குறைவு, வாக்கு கலகம், இல்லச் சிறப்பு, பிரயாண கஷ்டம். |
| சிங்கம் | :- தனதானிய செலவு, காரியனுகூலம், பிரயாசமிகுதி, பணவரவு. |
| கன்னி | :- காரிய வெற்றி, இல்லச்சிறப்பு, சிநேகநன்மை, பூமியால் நன்மை. |

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- நிலைப்பிரிவு, தேகசுகக் குறைவு, உறவினரால் கவலை, பெரியோர் மதிப்பு. |
| விருச்சிகம் | :- பூமியால் லாபம், பொருள் வரவு, சுப காரிய சித்தி, இல்லச்சிறப்பு. |
| தனு | :- வீண்பயம், காரிய விக்கினம், பிரயாணக் கஷ்டம், மனக்கவலை. |
| மகரம் | :- அயலவரால் நன்மை, மனமகிழ்ச்சி, களஸ்திர சுகம், சத்துரு ஜெயம். |
| கும்பம் | :- கோப மிகுதி, காரிய விக்கினம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு. |
| மீனம் | :- குடும்பச் சுகம், தேக ஆரோக்கியம், புத்திர சுகம், புதிய ஸ்தானம். |

மகா சிவராத்திரியை முன்னிட்டு மாபெரும் யாத்திரை

R.B பஸ் ஆசனப்பதிவகம்



கட்டணம் 1500/- மட்டுமே!

யாழ்ப்பாணம் R.B. செல்வம்

S.S பஸ் ஆசனப்பதிவகம்

(அரச அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்) தென்மராட்சி, வடமராட்சி S செவ்வேள்

யாழ். - கொழும்பு - திருமலை - கண்டி - பஸ்சேவைகள் மற்றும் யாழ். - கொழும்பு விமானப் பயணச் சீட்டுக்கள்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு வட பகுதி மக்களின் நன்மை கருதி எமது ஆசனப் பதிவகத்தினர் இலங்கையில் புகழ் பெற்ற திருத்தலங்களான மன்னார், திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, திருக்கோணேஸ்வரம், ஆகிய தலங்களுக்கு யாத்திரை ஒன்றை மேற்கொள்ள இருப்பதால் உடனடியாக தங்களின் ஆசனங்களுக்காக முற்கூட்டியே 25.02.2003 இற்கு முன்பதாக தமது பெயர், முகவரி என்பவற்றைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். யாத்திரை 01.03.2003அன்று காலை 6.00மணிக்கு யாழ்.நகரில் இருந்து ஆரம்பமாகி 03.03.2003 அன்று யாழ். நகரை வந்தடையும்.

சொற்ப ஆசனங்கள் மட்டும் உள்ளதால் தங்களின் ஆசனப் பதிவுகளுக்கு முந்துங்கள்.

யாழ்.நகரில் பதிவுகளுக்கு:
**ஆர்.பி(B) பஸ் ஆசனப்பதிவகம்**
நவீன சந்தை, வைரவர் கோயில் அருகில், யாழ்ப்பாணம். 15, Grand Bazaar, Jaffna.

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு: தென்மராட்சியில் மீசாலைப்பகுதியில் இயங்கி வந்த எமது S.S பஸ் ஆசனப் பதிவிடமான பழமுதிர்ச்சோலை (ஜெயம் கடை), கண்டி வீதி, மீசாலை அவர்களுக்கும் எமக்கும் இன்றிலிருந்து (20.02.2003) எவ்விதத் தொடர்பும் இல்லையென்பதை அறிவித்துக்கொள்கின்றோம்.

தென்மராட்சியில் பதிவுகளுக்கு:
**கணேசா காட்வெயர்**
(பழைய பிரதேச செயலகம் முன்பாக), சாவகச்சேரி.

**சாய்ராம் மருந்தகம்**
கண்டி வீதி சங்கத்தானை, சாவகச்சேரி

**விக்கினேஸ்வரா களஞ்சியம்**
கண்டி வீதி, புத்தூர்ச்சந்தி, மீசாலை.

**ஸ்ரீகண்ணகி பல்பொருள் வாணிபம்**
மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் அருகில், புத்தூர்ச் சந்தி

**ஐங்கரன் வீடியோ சென்ரர்**
ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை

வடமராட்சியில் பதிவுகளுக்கு:
**நெல்லைக்குமரன் ரேடேஸ்**
பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி.
T.P: 021-2263207.

மேலதிக தொடர்புகளுக்கு: S. செவ்வேள்
T.P.: 0777-174006, 0777-737368

(சி-602)

# மகனே தந்தையைச் சுட்டாராம்; மருதமுனை கொலையில் திருப்பம்

மருதமுனையில் அண்மையில் - பெற்றோல் நிலைய உரிமையாளர் எஸ்.எல்.அப்துல் அஸிஸ் (வயது 60) என்பவரின் கொலை தொடர்பாக புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக மருதமுனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி கொலையை அப்துல் அஸிஸ் ஹுபிர் (வயது 29) என்ற இவரது மகன் செய்திருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகித்து அவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

பொலிஸார் இக்கொலை தொடர்பாகச் சந்தேகத்திற்குரிய மகனை விசாரித்தபோது அவர், "தகப்பன் பல சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவதால் அவரை நானே துப்பாக்கியால் சுட்டேன்" என வாக்குமூலமளித்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை, இக்கொலையைப் பயன்படுத்தி, கிழககில் இன முரண்பாடுகளைத் தூண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சார்க் அமைப்பு அமைக்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



ஆசியப்பிராந்தியத்தில் உள்ள நாடுகளிடையே காணப்படுகின்ற அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த நோக்கத்தைச் சார்க் அமைப்புச் சரியாக நிறைவேற்றவில்லையென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கற்கைநெறிகளுக்கான தெற்காசியப்பிராந்திய மன்றத்தின் வருடாந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் இந்த மாநாடு நடைபெற்றது. தெற்காசிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் பல்கலைகழக உபவேந்தர்கள், உயர் கல்வி நிலைய இயக்குநர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மன்றத்தின் முன்னாள் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். யுனெஸ்கோ நிறுவனத்தின் இலங்கைக்கான நல்லெண்ணத் தூதுவர் மடிஸ்ரேச் சிங் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அங்கு உரைநிகழ்த்திய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்- அரசியல் மற்றும் நீதித்துறை போன்றன ஜனநாயக ரீதியில் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும், மனிதஉரிமை அமைப்புக்களும் பலபபடுத்தப்பட வேண்டும் என்றார். தெற்காசிய நாடுகளின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அந்த நாடுகளின் மனிதஉரிமை அமைப்புக்கள் பலமடைவது அவசியமாகின்றது.

அத்துடன் கல்வி, உயர்கல்வி, முறைசாராக் கல்வி போன்றவற்றை வேறுபாடுகள் இன்றி சகலரும் கற்றுக்கொள்ளும் வகையில் வசதிவாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த ஜனாதிபதி இந்த மன்றம் அதற்கான பணியை செவ்வனே செய்யும் எனத் தான் நம்புவதாகவும் கூறினார். (200)

# புலிகளின் படகுகள் முல்லைக்கடலில் பயிற்சி

## கடற்படையினர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடற்புலிகளின் ஆயுதம் பொருத்தப்பட்ட மூன்று படகுகள் முல்லைத்தீவுக் கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததைக் கடந்த திங்கட்கிழமை கடற்படைப் படகுகள் அவதானித்ததாகக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு கடற்படையினர் அறிவித்தனர் எனவும், கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதிக்கு வந்தபோது, புலிகளின் படகுகள் அங்கிருந்து அகன்று விட்டன எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## தேசிய சமாதான தின முன்னோடி நிகழ்வு செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

தேசிய சமாதான தின முன்னோடி நிகழ்வு நாளை காலை 10.00 மணிக்குச் செயலகக் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நிகழ்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சமாதானம் பற்றிய விசேட சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து மீள்குடியமரும் குடும்பங்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டக் கொடுப்பனவுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 400 பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதிகள், வங்கி முகாமையாளர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# திருமலையில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பமாகியது

திருகோணமலை மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கண்ணிவெடி அகற்றும் நிபுணரான என்டி.ஓ.லியோனி பாண்ட், திருமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கண்ணிவெடி அகற்றுவதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கண்ணிவெடிகளை அகற்றுவதுடன் மட்டுமன்றி இது தொடர்பான விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்கவேண்டும். கிளிநொச்சி, முல்லைதீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடிகள் அகற்றுவது தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கியமையினால்தான் இத்தகைய நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. திருகோணமலையிலும் திரியாய், கன்னியா, பீலியடி, மாங்காய் ஊற்று, நாமல்வத்த, மொரவேவ போன்ற பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்ற முன்பு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.



கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழீழத் தேசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் விளையாட்டு வீரர்களைப் படத்தில் காணலாம்.

# பாடசாலை மாணவர்கள் இருவரை 40 படையினர் சேர்ந்து தாக்கினர்!

கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த 40 படையினர் இரு பாடசாலை மாணவர்களைத் தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கொலுமடம சந்தியில் இரண்டு பாடசாலை மாணவிகளைக் கேலி செய்தது தொடர்பான பிரச்சினையிலேயே - 40 படையினர் சேர்ந்து இரு மாணவர்களைத் தாக்கியுள்ளனர் எனக் கல்கிசைப் பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

மேற்படி இரு மாணவர்களினதும் வீட்டுக்குச் சென்ற 40 படையினரும் அந்த மாணவர்களை மிக மோசமாகத் தாக்கியதுடன், வீடுகளையும் அடித்துச் சேதமாக்கினர்.

இச்சம்பவத்தில் மோசமாகப் பாதிக்கப்பட்ட இரண்டு மாணவர்களும் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாருக்கும், இராணுவத் தளபதிக்கும், கொத்தலாவல பாதுகாப்புக் கல்லூரியின் பணிப்பாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 40 படையினர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தி; அதிகாரிகளின் வேலைப்பட்டறை

## கிளிநொச்சி சிறான் அலுவலகத்தில்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான அனைத்து அரச அதிபர்கள், மாகாண பிரதம செயலாளர் மற்றும் வடக்கு கிழக்கிற்கான மத்திய வங்கி அதிகாரிகள் ஆகியோர்களுக்கான வேலைப்பட்டறை ஒன்று கிளிநொச்சியில் இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி சிறான் அலுவலகத்தில் இவ்வமைப்பின் ஏற்பாட்டில் இச்செயலமர்வு நடைபெறுகிறது. வடக்கு - கிழக்கு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக இவ்வேலைப்பட்டறையில் ஆராயப்படவுள்ளது.



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் நடந்த வன்னி இலக்கிய முயற்சிகள் பற்றிய கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் பேராசிரியர் சண்முகதாஸ் மங்களவிளக்கேற்றுவதை முதற்படத்திலும், முல்லைமணி வே.சுப்பிரமணியம் உரைநிகழ்த்துவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இலங்கைச் சிறைகளில் நடக்கும் மோசமான மனித உரிமை மீறல்கள்!

## மனித உரிமை அமைப்புத் தகவல், நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறைகளில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிறைகளில் கைதிகள் மோசமாகவும், கேவலமாகவும் நடத்தப்படுவதாகவும், சித்திரவதைகள் செய்யப்படுவதாகவும், அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதில்லை எனவும் அம்மனுவில் கூறப்பட்டுள்ளது.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் இந்த விவகாரத்தில் தலையிட்டு தர்வுகாண முன்வருமாறு அந்த மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு அமைப்பு ஒன்றின் தலைவரான அன்ரனி இமானுவேல் பெர்ணாண்டோ என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இவர் சிறையில் வைத்து சிறையதிகாரிகளால் மோசமாகத் தாக்கப்பட்டமை தொடர்பாகவே இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை, மேற்படி மனித உரிமை அமைப்பின் தலைவர் சிறையில் வைத்துத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

# 'டாட்டா' தலைவர் இலங்கை வருகிறார்

இந்தியாவின் பிரபல வர்த்தக நிறுவனமான 'டாட்டா' (TATA) தனது வர்த்தக நடவடிக்கையை இலங்கையிலும் ஆரம்பிக்கவுள்ளது. இது தொடர்பாக ஆராய இந்நிறுவனத் தலைவர் அர்ஊன. 'டாட்டா' இவ்வாரம் கொழும்பு வரவுள்ளார்.

ஏற்கனவே இந்நிறுவன அதிகாரிகள் கொழும்பு வந்துள்ளனர். 'டாட்டா' நிறுவனம் ஏற்கனவே இலங்கையில் ஐந்து நட்சத்திர ஹோட்டலான தாஜ்சமுத்ரா, பெருந்தோட்ட தாஜஎக்சோட்டிகா நிறுவனம் மற்றும் வட்டவல தேயிலைக் கம்பனி என்பவற்றை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில்

HAPPY BIRTHDAY



பெயர் : ர.நிரூபிகா
முகவரி: 'சரஸ்வதி வாசம்'
அல்வாய் தெற்கு, வதிரி.

ஏழாவது அகவையில்



பெயர் : கி.கிருஷிகா
முகவரி: வற்றாப்பளை,
முள்ளியவளை.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

### துர்நாற்றம் வீசும் கால்வாய்

யாழ்போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள கழிவு நீர் வாய்க்காலல் இருந்து துர்நாற்றம் வீசுவதால், இவ்வீதியால் பயணம் செய்வோர் பெரிதும் அசௌகரியங்களுககு உள்ளாகி வருகின்றனர்.

### திருக்குறள் மனனப் போட்டி

திருக்குறள் மனன எழுத்துப் போட்டி நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு நடைபெறுமென நல்லூர்க்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் தெரிவித்துள்ளார்.

### ஆண்டு விழாவையொட்டி போட்டிகள்

(தாவடி)

இணுவில் பொது நூலகத்தின் முதலாம் ஆண்டுப் பூர்த்தி விழாவை முன்னிட்டுப் பல்வேறு போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கரப்பந்தாட்டம், மென்பந்துத் துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், துவிச் சக்கரவண்டி ஓட்டம், மரதன் ஓட்டம் என்பவற்றுடன் பாடசாலை மாணவர்களுக்கு மொழித்திறன் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. (78)

### ஒருங்கிணைப்பு, விவசாய குழுக் கூட்டங்கள் ஒத்திவைப்பு

(கோப்பாய்)

வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், விவசாயக்குழுக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்றும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை குறிக்கப்பட்ட நேரத்தில் செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

### இல்ல மெய்லல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று மு.ப 10.30 மணிக்கு அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 25 - ச.ஆ.கோபாலமூர்த்தி.

தொடர்ச்சி...

கணிதத்தில் தெரியாத கணியம் ஒன்றை X எனக் குறிப்பிட்டுப் பின்னர் அதன் பெறுமானம் அறியப்படுவதுபோல, ஆலமரத்திலும் அதன் ஓரத்திலும் இருந்து, புண்களின் ஊடாக எது மனித உடலினுள் நுளைந்து காய்ச்சலை ஏற்படுத்துகிறது? என்பது தெரியாத நிலையில், எம் முன்னோர் அதற்குப் பேய் எனப் பெயரிட்டார்கள். விஞ்ஞானம் வளர்ந்து (பேய்= புறூசெல்லா கிருமி) பேய் என்பது புறூசெல்லாக் கிருமி என நிறுவிவிட்டது.

### சுகாதாரத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளைக் கைவிடவேண்டும்

முற்காலத்தில் சௌசம் (மலங்கழித்தபின் கழுவும்போது) குதத்திலும் குறியிலும் மணல் தேய்த்துக் கழுவுவது, அந்த உறுப்புக்களைச் சுத்திகரிக்கும் நடவடிக்கையாகக் கருதப்பட்டது. சைவசமயப் பிரமுகர் ஒருவரும் சௌசம் செய்வது எப்படி? எனக் குறிப்பிடுகையில், மணல் தேய்த்துக் கழுவவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். பிற்காலத்தில் அறிவு வளர்ச்சி காரணமாக, மக்கள் இது சரியான நடவடிக்கைதானா?, கடினமான பாத்திரங்களுக்கு மணல் தேய்த்துத் துலக்குவதுபோல மென்மையான உறுப்புகளுக்கு மணல் தேய்த்துக் கழுவுவது சரிதானா? எனச் சிந்தித்தனர். இது தவறு என உணர்ந்தனர். இந்த வழக்கத்தைக் கைவிட்டனர். இதேபோல புண்களின் ஊடாகவும், வாய் வழியாகவும் உடலினுள் நுளையும்போது மாத்திரம் புறூசலோசில் எனப்படும் பேய்க் காய்ச்சலை ஏற்படுத்தும் புறூசல்லாக் கிருமியும் வேறு கிருமிகளும் இருக்கக்கூடிய மூலஸ்தான கோமுகையிலிருந்து ஒழுகும் நீர், உற்சவ காலங்களில் மதகுருமாரும் அவரது உதவியாளரும் கால்வைத்து நின்று சுவாமிக்குத் தீர்த்தமாட்டிய தீர்த்தம் என்பனவற்றைப் பருகுவது சுகாதார நடவடிக்கையா? எனச் சிந்திக்க வேண்டும்.

### காசநோயும் நீரிழிவு நோயாளரும்

வீட்டில் வளர்க்கப்படும் பசுக்களுக்குக் காசநோய் இருக்கிறதா? எனப் பரிசோதிக்கப்படுவதில்லை. காசநோயுள்ள பசுவிலிருந்து பெறப்பட்ட காய்ச்சாத பாலின் மூலம் காசநோய் மனிதருக்குத் தொற்றலாம். சாதாரணமாகக் காசநோய் சுவாசப்பைகளைத்தான் தாக்குகிறது. இதற்குக் கடுமையான இருமல் இருக்குமெனப் பலரும் எண்ணுகிறார்கள். ஆனால், காசநோய்-எலும்பு, மூளை, உமிழ் நீர்ச்சுரப்பிகள் உட்படப் பல்வேறு பகுதிகளையும் தாக்கக்கூடியது. தலைமயிரைத் தவிர எந்த உறுப்பையும் காசநோய் தாக்கலாம் எனக் கூறப்படுகிறது. எனவே, காய்ச்சாத பால் கலப்புடைய எப்பொருளையும் பருகாமலும், உண்ணாமலும் இருப்பது வருமுன் காக்கும் நடவடிக்கையாக அமையும். நீரிழிவு நோயாளரைக் காசநோய் எளிதில் தாக்கும். எனவே நீரிழிவு நோயாளிகள் இவ்விடயத்தில் மிகமிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

### நீரிழிவு நோயாளருக்கு ஏற்படும் பங்கசு நோய்கள்

பங்கசு நோய்கள் - நகம், பாதம், விரல் இடை, தோல், நாக்கு, காது, யோனி போன்ற பல உறுப்புகளில் ஏற்படலாம். ஈரலிப்பான பகுதிகளிலேயே பங்கசுக்கள் பல்கிப் பெருகுவதால், நீர்த்தொடுகையைக் குறைத்து இயன்றவரை உலர்நிலைபேணல் பங்கசு விருத்தியைத் தடுக்கும்.



## நமது ஈழநாடு வழங்கும்




## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000

வழங்குவோர்: **என்.எஸ். இரத்தினம்**
(இரத்தின கோபால்ஸின் இணைந்த நிறுவனம்)
6, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
ஃகீறோ ஃகொண்டா மோட்டார் சைக்கிள்களின் வவுனியா விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

வழங்குவோர்: 1. **ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்**
YONEX MULTI PALACE
விளையாட்டு உபகரண விற்பனையாளர்கள்.
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



2. **சமுத்திரா ரேட்ஸ் (லிமிட்டட்)**
டீசல் என்ஜின், நெல் குற்றும், மா அரைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாக விற்பனையாளர்கள்.
3/2 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

மூன்றாம் பரிசு - 10,000

வழங்குவோர்: **சந்திரா மல்ரிகோட்யாட்**
531, பருத்தித்துறை வீதி, நல்லூர். பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
Fancy goods, gift items, fevicryl & acron paint items.



**இன்னும் ஏராளமான ஆறுதல் பரிசுகள்!**
**வினாக்கொத்துக்கு விடை தந்து பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!**

## உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003

### வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது?
(.....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது?
(.....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன?
(.....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்?
(.....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது?
(.....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை ஒரே வகையில் பூர்த்தி செய்து, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

**'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'**
**நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ------------------------------------

வயது: ------------------------------------

முகவரி: ------------------------------------



*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*

# சேது சமுத்திரத் திட்டம்

## ஓர் பார்வை

**உழைப்போம் உயர்வோம்!**

**தொழில் மலர்**

**அறிமுகம்**

இலங்கையின் மிக நெருங்கிய நேச நாடு இந்தியாவாகும். காரணம், இரண்டு நாடுகளினதும் புவியியல்ரீதியான பின்னணி மிகவும் இறுக்கமான, தவிர்க்கமுடியாத தொடர்புகளைக் கொண்டிருப்பதாலாகும். இத்தொடர்பானது இரு நாடுகளினதும் பொருளாதார, அரசியல், பாதுகாப்பு விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்துவதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகவுள்ளது. இந்த வகையில் இச்சேது சமுத்திரத்திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் இலங்கை எதிர்காலத்தில் மிகப்பயமான இழப்புக்களைச் சந்திக்க நேரிடும் என்பதை மறுக்கமுடியாது.

முதலில் சேது சமுத்திரத்திட்டம் என்றால் என்ன என்பதையும், பின் அதன் அமைவிடம், புவியியற் பின்னணி, வரலாற்றுப் பின்னணி, இத்திட்டத்தினால் இந்திய - இலங்கை நாடுகளுக்கு ஏற்படப்போகும் விளைவுகள், இத்திட்டத்தின் இன்றைய நிலை என்பவற்றை எடுத்து நோக்குவோம்.

**அமைவிடமும்**
**புவியியற் பின்னணியும்**

தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கடற்கரைக்கும் இலங்கையின் வடபகுதிக்கும் இடைப்பட்ட கடற்பகுதியே சேது சமுத்திரம் என்று அழைக்கப்படுகின்றது. இராமர் தன் வானரப் படைகளுடன் இப்பகுதியிலிருந்தே தலைமன்னாருக்குப் பாலம் அமைத்துக் கடந்ததாக இதிகாசக்கதையில் கூறப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டமானது 1955 ஆம் ஆண்டுவரை இத்திட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து, இராமேஸ்வரம் கப்பல் கால்வாய்த்திட்டம் (Rameswaram Shipping Canal) என்றே கூறப்பட்டது. சேது சமுத்திரப் பகுதி ஆழங்குறைந்த கடற்பகுதியாகும். சில இடங்களில் மணல் மேடுகளும் தெரிகின்றன. ஆழம் 12 அடிக்குக் குறைவாகவிருப்பதாலும் - மணல் மேடுகளும், பாறைகளும் இருப்பதனாலும் இந்த வழியாகப் பெரிய கப்பல்கள் செல்லவியலாது. இதனால் வெளிநாட்டுக்கப்பல்கள் இலங்கையைச் சுற்றிக்கொண்டுதான் இந்தியாவின் துறைமுகங்களுக்குச் செல்லவேண்டும். இந்திய நாட்டின் 3555 மைல் கடற்கரையில் மேற்குக்கரையிலிருந்து கடல் எல்லைக்குள் கிழக்குக்கரைவரையுள்ள சென்னை, விசாகப்பட்டனம், கல்கத்தா துறைமுகம்வரை கப்பல்கள் செல்வதற்குத் தொடர்ச்சியான கப்பற்பாதை இல்லை.

ஏனெனில், இராமேஸ்வரத்தின் கிழக்குக்கரைக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையிலுள்ள ஆதம்ஸ் பாலம் (Adams Bridge) என்ற பகுதியிலுள்ள மணற்கல் மேடுகளாலும் இவ்விடத்தில் கடலின் ஆழம் மிகக்குறைவாக இருப்பதாலுமே ஆகும். எனவே, கிழக்குக் கடற்கரைப் பகுதியில் ஒரு கப்பற்கால்வாய் வெட்டும் திட்டம் நீண்டகாலமாகவே சிந்தனையில் இருந்து வந்திருக்கின்றது.

சேது என்பது புனிதமான நீர்ப்பகுதியாகவே பொருள்படுகிறது. வரலாற்றுப்பெருமை மிக்க இராமேஸ்வரம் கோயில், கோதண்ட சுவாமிகள் கோயில் என்பனவும் இராமர் அணையும் காணப்படுவதால் இது புனிதப் பகுதியாகக் காணப்படுகின்றது. இச்சமுத்திரமானது பாம்பன்தீவு, இராமரணை, தலைமன்னார்தீவு என ஒரு தொடராக அமைந்திருப்பதால் சேது சமுத்திரமானது இரு கூறாக (வடக்கு, தெற்கு) பிரிந்துள்ளது. இந்த நிலப்பரப்பில் ஒரு கால்வாய் வெட்டுவதன் மூலம் கப்பல் போக்குவரத்தை இலகுவாக்கலாம்.

### சேது சமுத்திரக் கால்வாய் அமைவிடம்




**வரலாற்றுப்பின்னணி**

இந்தவகையில் முதன்முதலாக 1860 ஆம் ஆண்டு ஆங்கிலேயக் கடற்படைத்தளபதி A.D.ரெயிலர் என்பவரால் திட்டப்பட்டதுதான் சேது சமுத்திரத் திட்டமாகும். கிட்டத்தட்ட 130 ஆண்டுகளாக முதலில் பிரிட்டிஷ் அரசும், பின்னர் வந்திறங்கிய அரசும் அத்திட்டத்தை நிறைவேற்றத் தவறியிருந்தன. இவ்வாறு ஆங்கிலேயர் ஆட்சியில் மட்டும் 1922 ஆம் ஆண்டு வரை 9 திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால், இவை எதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. பின்னர் சுதந்திரத்திற்குப்பின் சென்னை அரசு இரண்டு திட்டங்களை மத்திய அரசிற்கு முன்வைத்தது.

1. தூத்துக்குடி துறைமுகத்தை ஆழமாக்குதல் (20 அடி)
2. சேது சமுத்திரம் பற்றிய தொழில்நுட்ப ஆய்வை மேற்கொள்ளுதல் (19-05-55). இத்திட்டம் பற்றிய கடிதத்திலே முதன்முதல் சேது சமுத்திரத்திட்டம் என்ற பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விரண்டு திட்டங்களையும் பார்த்த மத்திய அரசு - இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையாகக் காணப்படுவதால், 01-11-55 இல் டாக்டர் ஆற்காடு இராமசாமி முதலியாரின் தலைமையில் 'சேது சமுத்திரத்திட்டக் குழு' என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

கலாநிதி எஸ்.சூசை ஆனந்தன்

இக்குழுவிற்குப் பின்வருமாறு பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. அதாவது, அடிப்படையில் இந்தியாவின் மேற்கிலிருந்து கிழக்குப் பகுதிவரை ஆழ்கடல் கப்பல் பயணத்தை மேற்கொள்வதற்கு வாய்ப்பாகப் பாக்குநீரிணைப்பையும், மன்னார் வளைகுடாவையும் ஆதம்ஸ் பாலத்தை (Adam's Bridge) அணுகும் பகுதியில் ஒரு கால்வாய் வெட்டி இணைப்பதன் சாத்தியத்தையும், அதன் தேவையையும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாகும். இக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது -

இந்தியாவின் மேற்கிலிருந்து கிழக்கு வரை கடல்வழிக்கப்பல் பயணம் பாதுகாப்பு உடையதாக அமையவேண்டும். இக்கால்வாய் இந்தியா - இலங்கை கடல் எல்லைக்கோட்டிற்கு (Medial line) மேற்கில் இந்தியாவின் கடல் எல்லைக்குள் அமைய வேண்டும். ஆதம்ஸ் பாலப்பகுதியின் கடலிலேயே ஆழமான கால்வாய் வெட்டலாம் என்ற கருத்து 1921 இல் தெரிவிக்கப்பட்டிருந்தது. இக்கருத்தை டாக்டர் முதலியார் குழு ஆதரிக்கவில்லை. கால்வாய் இலங்கையின் கடற்பகுதி எல்லைக்கு அருகில் அமைகின்றது என்பதும் ஒரு காரணம் ஆகும். வேறு ஒரு ஆய்வில் இக்கால்வாய் இராமேஸ்வரத் தீவில், பாம்பன் பாலத்திற்குச் சற்றுக் கிழக்கே இருக்கவேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதனை டாக்டர் முதலியார் குழு ஏற்கவில்லை. ஆனால் பல காரணங்களின் அடிப்படையில் 1860 ஆம் ஆண்டு இத்திட்டத்தை முதலில் ஆராய்ந்த ரெயிலர் - பாம்பன் பாலத்திற்கு மேற்கே இந்திய நிலப் பகுதியிலேயே ஒரு கால்வாய் அமைக்க வேண்டுமெனப் பரிந்துரைத்ததையே முதலியார் குழுவும் ஏற்றுக்கொண்டது.

26 அடி ஆழங்கொண்ட கப்பல் செல்ல வசதியானதாகக் கால்வாய் அமையவேண்டும் என்பது குழுவின் பரிந்துரை.

(அடுத்த வாரமும் தொடரும்)

# தனிமனித ஆளுமை விருத்தி

சாதாரண பேச்சுவாக்கில் "இவர் ஒரு ஆளுமையான மனிதராகத் தென்படுகிறார்" என்று கதைப்பது வழமை. இந்த ஆளுமையை ஆங்கிலத்தில் Personality எனக் கூறலாம். சாதாரணமாக Personality என்று கூறும்போது அது ஒருவரின் நடை, உடை, பாவனையைக் குறிப்பதாகப் புலர் கருதுகின்றார்கள். இது தவறு. ஆளுமையுடைய ஒருவருக்கு அந்த ஆளுமையை வழங்கிய அல்லது அந்த ஆளுமைக்குப் பொறுப்பான பல பண்புகளை நாம் மறந்து விடுகிறோம். ஆளுமையை வளர்ப்பதற்கு ஒரு மனிதனுக்கு இருக்க வேண்டிய சகல நற்பண்புகளும் அவரிடம் அமைதல் அவசியம். அத்துடன், பின்வரும் முக்கிய பண்புகளை அவர் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

✦ **Initiativeness** - தைரியமாக ஒரு காரியத்தை ஆரம்பித்து நடத்தக்கூடிய இயல்பு.

✦ **Loyality** - நம்பிக்கைக்குப் பொறுப்பானவராக இருத்தல்.

✦ **Courage and Commitment** - துணிவுடன்தான் பொறுப்பேற்ற விடயத்தைச் சிரத்தையுடன் நடாத்தி முடிக்கும் பண்பு.

✦ **Accountability** - தான் செய்து முடித்த காரியத்தின் விளைவுகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் பண்பு.

✦ **Responsibility** - தான் பொறுப்பெடுத்த வேலையைப் பொறுப்புணர்ச்சியோடு செயலாற்றுதல்.

மேலே இனங்காணப்பட்ட சகல பண்புகளும் அடங்கிய, சிறப்பான ஆளுமையுடைய பல கல்லூரி அதிபர்களை, அரச ஊழியர்களை, திணைக்களத்தலைவர்களை நாம் அடிக்கடி நினைவுகூருவதும் - அவர்களைப் பற்றியும், அவர்களின் செயற்திறன் பற்றியும் கதைப்பதும் வழக்கமான ஒரு செயலாகும். இப்படி நினைவுகூர்ந்து கதைக்கும்போது, தற்பொழுது இத்தகைய ஆளுமை உடையவர்களை நாம் மிகக்குறைவாகவே காண்கிறோம் என்பதும் ஒரு பொதுவான அபிப்பிராயம். இன்றைய இளைய சந்ததியினர் சிறப்பான தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கு இத்தகைய ஒரு ஆளுமை வளர்ச்சி மிக அவசியமானதாகும். எதிர்காலத்தில் சகல வேலைவாய்ப்புக்களும் தனியார்துறையிடம் மாறிவருவதை அவதானிக்கலாம். அரச நிறுவனங்களில் வேலை வாய்ப்பைப் பெறும் சந்தர்ப்பம் அருகிவருகிறது. பெரும்பாலான அரச நிறுவனங்கள்



தனியார்மயப்படுத்தப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார அபிவிருத்திப் பாதையில் இது தவிர்க்கமுடியாததாகவும் அமைகிறது. தனியார் நிறுவனங்கள் (**Private Sectors**) சிறந்த சேவையுடன் கூடிய அதிக இலாபத்தை நோக்கமாகக் கொண்டவை.

இத்துறையில் வேலை வழங்கும்போது அவர்கள் ஆளுமை உடையவர்களாகவிருக்க வேண்டுமெனத் தனியார்துறை நிர்வாகிகள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, பல்கலைக்கழகக் கல்வியை முடித்த எமக்கும்கூட வேலை கிடைக்கவில்லையே என ஏக்கத்துடன் கேட்கும் இளைஞர்கள், தாங்கள் ஒரு சிறப்பான தொழிலைப் பெறுவதற்கு ஏற்ற ஆளுமையுடையவர்களாகத் தங்களை மாற்றியுள்ளார்களா என்பதே முக்கிய கேள்வியாகும்.

தற்போதைய பல்கலைக்கழகக் கல்வியில்- வேலை பெறக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அப்படியாயின் இந்த ஆளுமை விருத்தியைப் பல்கலைக்கழகத்திற்கு வந்த பின்பு, பல்கலைக்கழகக் கல்வியூடாக வழங்க முடியுமா? அன்றேல் இவை சிறுபராயத்திலிருந்து வளர்த்தெடுக்கப்பட வேண்டியதா? என்ற கேள்வி எழுகிறது. ஆளுமை விருத்தியைச் சிறுபராயத்திலிருந்து வளர்த்தெடுப்பதுதான் சரியான அணுகுமுறை. இதற்குப் பெற்றோரும், கல்வி நிலையங்களும், சூழலும் சிறப்பாகப் பங்காற்றமுடியும். பெற்றோர்கள் தம் பிள்ளைகளைப் பலதுறைகளிலும் ஈடுபடச்செய்தல் அவசியம். விளையாட்டு, சமயநிகழ்ச்சிகள், சங்கீதம் போன்ற துறைகளிலும், சமூக சேவையிலும் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். அத்துடன், சிறப்பான ஆங்கிலக்கல்வியை அவர்களுக்கு சிறுவயதில் இருந்தே கற்பிக்க ஏற்பாடு செய்தல் அவசியம். இதைவிட கணினி அறிவையும் அவர்களுக்கு இளமையிலேயே புகட்டுதல் மிகமிக அவசியமாகும். இவற்றை ஏற்பாடு செய்வதால் பிள்ளைகளின் தன்னம்பிக்கை வளர்வதற்கு இடம் ஏற்படுகிறது. பாடவிதானத்திற்கு அப்பால் பொது அறிவு மற்றும் உலக விடயங்களை அறியும் அளவிற்குப் பிள்ளைகளின் புத்தக வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்து அதற்கு வழிவகை செய்துகொடுக்க வேண்டும். இவற்றைவிட பெற்றோர்கள் பிள்ளைகளுடன் கூடிய நேரம் செலவுசெய்து, அவர்களின் பிரச்சினைகளுக்கு வழிகாணவேண்டும்.

எஸ்.ராஜதுரை
விவசாய பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

பெற்றோர் என்ற ஸ்தானத்தில் மட்டும் இருக்காது, ஒரு நல்ல சகபாடியாகவும் (**Companion**), நண்பனாகவும் (**Friend**), ஏற்பாட்டாளராகவும் (**Facilitator**), ஆலோசனை வழங்குபவராகவும் (**Advisor**), தன்னம்பிக்கை ஊட்டுபவராயும், தேவையைப் பொறுத்து அந்தந்த வேளையில் இத்தகைய கடமையைச் செய்ய வேண்டும். இப்படிப் பெற்றோர்கள் தொழிற்படும்போது தமது பிள்ளைகளைப்பற்றி அவர்கள் சரியான கணிப்பீட்டைச் செய்யவும் - அவர்கள் பிரச்சினைகளை இனங்காணவும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அத்துடன், பிள்ளைகளும் பெற்றோருடன் மனம்விட்டுப் பேசி - தமது குறைகளையும், பிரச்சினைகளையும் பகிர்ந்துகொள்ள விருப்பத்துடன் முன்வருவார்கள்.

மேலும் பிள்ளைகளைப் பலவகையான கல்விசார் கருத்தரங்குகள், ஆராய்ச்சி மாநாடுகள், சொற்பொழிவுகளுக்கு அழைத்துச்சென்று - அவற்றை அவதானித்தல், பல இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று பலருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பங்களை வழங்குதலும் அவர்களின் ஆளுமை விருத்திக்கு உதவும்.

இதைவிடக் கல்லூரிகளும், கல்விசார் நிறுவனங்களும் மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பதில் அர்த்தமான பங்களிப்பைச் செய்யமுடியும். ஆரம்பப் பாடசாலைகளும், கல்லூரிகளும் ஆளுமை வளர்ச்சிக்கான தனியான திட்டம் ஒன்று வகுப்பது அவசியம். இத்திட்டத்தில் வினைத்திறனான ஆங்கிலக் கல்வியுடன், கணினி அறிவை வழங்குதல் மற்றும் ஆளுமைவிருத்தியை வழங்கக்கூடிய நிகழ்வுகளான விளையாட்டு, மொழித்திறன், பட்டிமன்றம், நாடாளுமன்றம், பேச்சுப்போட்டி, சமூக சேவை போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்தக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி வழிவகுத்தல் இன்றியமையாதது. இத்தகைய செயற்பாடுகளினூடாக ஒரு மாணவன் - தான் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெற முன்பே கணிசமான ஆளுமையை விருத்தி செய்துகொள்ள முடியும்.

தற்போதைய பல்கலைக்கழகக் கல்வி முறையில் மாணவர்களின் ஆளுமை பற்றியும், அதனை விருத்தி செய்வதற்குரிய வழிமுறைகள் பற்றியும் பெரிய அளவில் எந்தவொரு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படாதிருப்பது வருந்தத்தக்க ஒரு நிகழ்வு. இதனால்தான் இன்று பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் பல மாணவர்கள் தகுதியான தொழில்வாய்ப்பைப் பெறமுடியாது இருக்கிறது.

ஒரு மாணவனுடன் ஒரு சில நிமிடங்கள் உரையாடியபின் நீர் ஒரு பட்டதாரியா என்று கேட்கும் அளவுக்கு அவரின் ஆளுமை அமைய வேண்டிய இடத்தில், அவர் தான் ஒரு பட்டதாரி எனக்கூறிய பின், இவர் ஒரு பட்டதாரியா? என அங்கலாய்க்கும் நிலையை இன்று காணக்கூடியதாக இருக்கிறது.

(அடுத்த வாரம் தொடரும்)

# முகாமைத்துவத் தொழிற்சந்தைக்கு நீங்களும் தயாரா?



கடந்த இரு தசாப்தங்களில் உலகப் பொருளாதாரமானது விவசாயத்துறைசார் பொருளாதாரத்தில் இருந்து கைத்தொழிற் துறைசார் பொருளாதாரமாக மாற்றம் பெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் பொருளாதார மாற்றங்களுக்கு - தற்போது தகவல் தொழில்நுட்பமும், அதனோடிணைந்த உலகளாவிய ரீதியான வலைப்பின்னலும் முக்கியத்துவம் பெறத்தொடங்கியுள்ளன. வங்கிகளின் பண வடிவங்களிலும், சேவைகளின் வடிவங்களிலும் பல மாற்றங்கள் உருவாகியுள்ளன. வர்த்தகத்துறையானது தற்போது கணினிமயப்படுத்தப்பட்டதாக மாறியுள்ளது. இந்நிலையில் உலக மாற்றங்களும் அதனோடு இணைந்த தொழில்நுட்ப மாற்றங்களும் மனிதனது செயற்பாடுகளில் பல்வேறு வடிவங்களில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதோடு, அவனது வாழ்க்கைத்தரத்திலும், வாழ்வியற் கோலங்களிலும் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளன. இந்தவகையில் உலகப் பொருளாதாரத்தில்- வேலையின்மை என்பது பெரும் பிரச்சினையாக எதிர்காலத்தில் எழவுள்ளது. 2001 ஆம் ஆண்டு மத்திய வங்கித் தகவல்களின்படி 10.4% இலங்கையின் வேலையின்மை விகிதமாகக் காணப்படுகிறது.

***துறைசார் வேலைவாய்ப்புப் புள்ளிவிபரம்***

| | |
|---|---|
| விவசாயம், மீன்பிடி | 37.7% |
| சுரங்கத்தொழில் | 1.3% |
| உற்பத்தித்துறை | 16.8% |
| கட்டட நிர்மாணம் | 6.8% |
| மின்சார, உயிர்வாயு | 0.7% |
| வர்த்தகம் | 13.3% |
| அரச சேவை மற்றும் இராணுவம் | 23.4% |

இத்தரவுகளின்படி இலங்கையில் அதிகளவில் விவசாயம், மீன்பிடியிலும் அடுத்ததாக அரச சேவையிலும் அதிகளவானோர் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். ஆனால், இத்தரவுகள் யாவும் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதியினைத் தவிர்த்து எடுக்கப்பட்ட தகவல்கள் ஆகும். ஆனால், யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தமட்டில் ஏறத்தாழ 83,000 பேர் வேலையற்றுள்ளனர் என்பது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபரத் தகவல்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இது யாழ். மாவட்டச் சனத்தொகையின் 16.6% ஆகக் காணப்படுகின்றது. இத்தகைய நிலையிலும் இலங்கையில் தற்போது காணப்படுகின்ற பொருளாதாரப் பின்விளைவுகளோடு ஒப்பிடும்போது, எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது சம்பந்தமாகப் பலத்ததொரு கேள்விக்குறி உருவாகிவருகின்றது.

ஏனெனில், 2003 ஆம் ஆண்டுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் நாட்டின் அபிவிருத்திக்கு அரச மூலதனச் செலவினம் எதனையும் செய்வதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான பொருளாதாரம்சார் தகைமைகளும் காணப்படவில்லை. அரசாங்கமானது கடந்தகாலப்பகுதியில் யுத்தத்திற்குச் செலவிட்ட தொகைகளில், பெருவாரியான படுகடன் காரணமாக படுகடன் மீள் கொடுப்பனவும், அதற்கான வட்டிச் செலவும் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றன.

| 2003 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் உத்தேச மதிப்பீடுகள் | | |
|---|---|---|
| மொத்தவருமானம் | | 339 பில்லியன்கள் |
| வருமானம் | 316 பில்லியன்கள் | |
| | 14 பில்லியன்கள் | |
| வெளிநாட்டுக் கிடைப்பனவு | 09 பில்லியன்கள் | |
| நடைமுறைச்செலவு | 333 பில்லியன்கள் | |
| மூலதனக் கொடுப்பனவு | 118 பில்லியன்கள் | |
| படுகடன் மீள்கொடுப்பனவு | 196 பில்லியன்கள் | |
| முற்பணக் க/கு | 02 பில்லியன்கள் | -649 பில்லியன்கள் |
| மொத்தக் கடன் தேவைப்பாடு | | 311 பில்லியன்கள் |

இத்தகைய இலங்கையின் பொருளாதாரநிலையில் அரசாங்கமானது அரசசேவைக்கான ஆட்குறைப்பினை வேண்டிநிற்கின்றது. இந்நிலையில் எதிர்காலத்தில் அரசசேவை வேலைவாய்ப்புக்களுக்காகக் காத்திருப்பவர்கள் மிகவும் கடுமையானதொரு போட்டிப் பரீட்சையில் தேறவேண்டிய கட்டாயச் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் இலங்கையைப் பொறுத்தவரையில் ஓர் நபர் எத்தகைய வகைகளில் தொழில் வாய்ப்பினைப் பெற முடியும் என்பதனை உற்று நோக்கினால்,

1. கடுமையான போட்டிப் பரீட்சை மூலம் அரசசேவைகளுக்குள் சேர்தல்
2. சுயதொழில் முயற்சி
3. அரசசார்பற்ற நிறுவனங்களின் வேலைவாய்ப்பு (NGO)
4. தனியார் துறை வேலைவாய்ப்பு
5. வெளிநாட்டு வேலைவாய்ப்பு

மேற்குறிப்பிட்ட ஏதோ ஓர் துறையிலேயே வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன், அரசசேவைகள் மற்றும் தனியார் சேவைகள் என்பன கணினிமயப்படுத்தப்படுவதால் எதிர்காலத்தில் மேலும் வேலையில்லாப் பிரச்சினைகளே அதிகரிக்கக்கூடிய நிலையே காணப்படுகின்றது. இத்தகைய பின்புலங்களில் எதிர்காலத்தில் ஓர் சிறந்த தொழிலை நீங்கள் பெற்றுக்கொள்வதற்காக எவ்வாறு நீங்கள் உங்களைத் தயார்படுத்தப்போகின்றீர்கள் என்பதனை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

எதிர்காலத்தில் உங்களுடன் போட்டியிட உள்ளவர்கள் யாவர்? அவர்களுடைய துறைசார் அனுபவங்கள், அறிவு என்பன என்ன நிலையில் காணப்படுகின்றது என்பதனை கீழ்வரும் வென்வரிவரைபு மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

இவ்வரைபின் மூலம், நாம் எத்தகைய தன்மை உடையவர்களுடன் எல்லாம் போட்டியிடப் போகின்றோம் என்பதனை நாம் உணர்ந்துகொள்ளமுடியும். இங்கு




இவை அனைத்துத் தகைமைகளும் கொண்ட நபர்கள்

தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியத் தன்மை விகிதத்தில் இங்கே தரப்படுகிறது.

நிறம் தீட்டிக்காட்டப்பட்டுள்ள பகுதியிலுள்ள நபர்களுக்கே உயர்மட்டத் தொழில்வாய்ப்பினைப் பெறக்கூடிய சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாகக்கூடும். எனவே, எவ்வாறு உங்களை நீங்கள் தயார்படுத்தப்போகின்றீர்கள்? எத்துறைசார் தொழிற்துறையை நீங்கள் தேர்ந்தெடுக்கப்போகின்றீர்கள் என்பதனை நீங்கள் ஏற்கனவே முடிவுசெய்து அத்துறை நோக்கிய உங்கள் அறிவினையும், அனுபவத்தினையும் நீங்கள் முன்னெடுத்துச்செல்லவேண்டும்.

எனவே, இன்றைய உலகில் பரந்தளவு நூல் அறிவுடன் துறைசார் அனுபவ அறிவு பெரிதும் வேண்டப்படுகிறது. அத்துடன், உலக மயமாக்கலின் விளைவுகளில் தனியார்துறையினைப் பொறுத்தவரையில் ஆங்கில அறிவின் முக்கியத்துவம் பெரிதும் வேண்டப்படுகிறது. இந்தவகையில் இலங்கையில் துறைசார், தொழில்சார் கற்கைநெறிகளை ஆராய்வது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இலங்கையிலும் பொதுவாக உலகளாவியரீதியிலும் பல நாடுகளில் வர்த்தக முகாமைத்துவத் துறைகளில் பின்வரும் தொழில்சார் கற்கைநெறிகள் பிரபல்யமாகக் காணப்படுகின்றன.

1. CIMA
2. ACCA
3. ICAL
4. CIM
5. SLIM
6. aat

போன்ற தொழில்சார் கற்கைநெறிகள் காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் பல உயர்பதவிகளில் முகாமைத்துவம், கணக்கியல் துறைகளில் வகிப்பவர்கள் ஏதாவது ஓர் தொழில்சார் கற்கைநெறியைக் கற்றவர்களாக இருப்பதுடன், அத்துறைசார் பட்டம் பெற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

தனியார்துறையைப் பொறுத்தவரையில் அவர்களது செயற்பாடுகள் எப்பொழுதும் சிறப்பானதாகவும், வினைத்திறன் வாய்ந்ததாகவும் காணப்படுவதுடன், அச்செயற்பாடுகளை மிகவும் சிறந்தமுறையில் மேற்கொள்ளச் சிறந்த கல்விப் பின்னணியும், அனுபவமும் தேவைப்படுகிறது.

எனவே, தனியார்துறையினைப் பொறுத்தவரையில் அந்நிறுவனங்களின் உயர் முகாமைப் பதவிகளை வகிப்பவர்கள் கட்டாயமாகச் சிறந்த அனுபவத்தினையும், துறைசார் அறிவினையும், ஆங்கில அறிவு மட்டத்தினையும் கொண்டிருப்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

எனவே, இத்தகைய அறிவு வளர்ச்சிக்கும், தனியார்துறைசார் தொழில் வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக்கொள்வதற்கும் உங்களை நீங்கள் எவ்வாறு தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதனை தற்போது விளங்கிக்கொள்ளமுடியும் என்ற தன்னம்பிக்கை ஏற்பட்டுள்ளதல்லவா?

**- எஸ். வசந்தகுமார்.**

# தொழில்வங்கி



| | | |
|---|---|---|
| நிறுவனம்:- | யாழ். பல்கலைக்கழகம் | சூம்ஸ் அன் கம்பனி லிமிடெட் |
| வெற்றிடமாக உள்ள பதவிகள்:- | உதவி நூலகர் | பொறியியலாளர்கள் |
| அடிப்படைத் தகுதி:- | அங்கீகரிக்கப்பட்ட பட்டச் சான்றிதழ் | B.Sc. Engineering |
| விண்ணப்ப முடிவு திகதி | 15.03.2003 | 26.02.2003 |

தொழில் வங்கியில் வரும் விடயங்கள் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்-
" நமது ஈழநாடு"
அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | ஊர்காவற்துறை | சங்கானை | நெல்லியடி | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றை | 60/- | 50/- | 40/- | 50/- | 60/- | 60/- | 50/- |
| உருளைக்கிழங்கு | 40/- | 40/- | 40/- | 50/- | 40/- | 45/- | 40/- |
| கத்தரிக்காய் | 40/- | 40/- | 30/- | 60/- | 40/- | 60/- | 40/- |
| பாகற்காய் | 40/- | 30/- | 30/- | 60/- | 40/- | 40/- | 50/- |
| வெண்டிக்காய் | 40/- | 20/- | 20/- | 35/- | 40/- | 30/- | 20/- |
| கரட் | 80/- | 40/- | 40/- | 60/- | 60/- | 60/- | 80/- |
| பீற்றூட் | 40/- | * | 50/- | 30/- | 50/- | 40/- | 60/- |
| வெங்காயம் | 20/- | 20/- | 20/- | 40/- | 30/. | 25/- | 22/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 40/- | 40/- | 40/- | 50/- | 50/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

'முற்றியும் முற்றாது எறிற்றும் அறைப்படுத்தும் பற்றற்கு அரியது அரண்'

- *திருக்குறள்*

# நமது நோக்கு

## ஒரு குத்தகைக்குப் பின்னால்...!

வடக்கு-கிழக்கில் நிரந்தரமான அமைதிச் சூழல் ஒன்று ஏற்படும்வரை - இப்பகுதிகளிலுள்ள வளங்களையோ, தளங்களையோ - வெளிநாடுகளுக்கு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடுவதைத் தவிர்க்குமாறு விடுதலைப் புலிகள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த நிலையிலும் -

அதற்கு செவிசாய்க்காததுபோல, திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களை - இந்தியப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கும் நடவடிக்கைகள் தீவிரம்பெற்று வருகின்றன.

தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள வளங்கள் மற்றும் முக்கிய மையங்களின் பொறுப்புப் பற்றிய கருத்தாடல்கள் - எதிர்காலப் பேச்சுக்களில் மிக முக்கியமான பங்கினை வகிக்கப்போகின்ற நிலையில் -

அவ்வாறான கட்டத்திற்கு வரமுன்னரே - வெளிநாடுகளுக்கு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு - வட-கிழக்குப் பகுதிக்குள்ளிருக்கும் வளங்களைக் குத்தகைக்கு விடுவதென்பது - தமிழர் தரப்பைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ளப்படமுடியாத விடயமாகும்.

அதிலும் குறிப்பாக - தமிழர் தாயகத்தின் கேந்திர நிலையமான திருகோணமலையில் - இவ்விதமான 'குத்தகைச் செயற்பாடுகளை' - விடுதலைப் புலிகளின் கலந்தாலோசனையின்றி அரசாங்கம் மேற்கொள்வதானது, தேவையற்ற சந்தேகங்கள் கிளம்புவதற்கும் வழிவகுப்பதாகின்றது.

தமிழ்மக்களின் தாயகப்பகுதியில் அரசினால் மேற்கொள்ளப்படவல்ல முக்கிய நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும் - அது தமிழர் தரப்பின் கலந்தாய்வின்றி, அனுமதியின்றி முன்னெடுக்கப்படுமாக இருந்தால் - பிரதானமாக, அரசாங்கத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடி சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் வேளையில் - பேச்சுவார்த்தை மேசைகளுக்கு அவ்விடயம் செல்லாது, அது செயற்படுத்தப்படுமாக இருந்தால் -

அது இரண்டு தரப்புக்குமான சுமுக உறவைப் பாதிக்கும் என்பதோடு, நம்பிக்கையீனத்தையும் தோற்றுவிக்கும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியாததல்ல.

எனினும் - அரசாங்கம் இதைக் கவனத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

அதிலும் - கிழக்கு மாகாணம், மூவினங்களும் வாழும் பகுதி என்பதோடு - புவியியல் ரீதியாக, தென்னாசியப் பிராந்தியத்தின் மிகக் கவனத்திற்குட்பட்ட பகுதி என்ற ரீதியிலும் - அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஒரு பக்கத்தரப்பாக அமைந்து விடுவது எவ்வகையிலும் ஆரோக்கியமான விடயமல்லவே.

அதேவேளை - திருகோணமலையைப் பொறுத்தவரையில் அமெரிக்காவும், இந்தியாவும் - தமது புவிசார் நலன்களுக்கு, அதனைப் பயன்படுத்த முனைப்புக் காட்டும் வேளையில்,

இதுபற்றித் தெரிந்திருந்தும் - அங்குள்ள எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்தும் அனுமதியை வழங்குவதென்ற முடிவுக்கு அரசாங்கம் வருமானால் -

இது வெறுமனே வர்த்தக நோக்கினை அடிப்படையாகக் கொண்டது மட்டுமே என அரசாங்கம் பூசி மெழுகி விட முடியாது.

இந்தவகையில் - எண்ணெய்க் குதங்களின் குத்தகைக்குப் பின்னாலுள்ள 'அரசியலை' ஒதுக்கிவிடவும் முடியாது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான சமாதானப் பேச்சுக்களுக்கு, இந்தியா காட்டிவரும் மகிழ்ச்சியற்ற மனநிலையும் - விடுதலைப் புலிகள் மீது இந்தியா தொடர்ந்து காட்டிவரும் மாறாத வன்மமும் - திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்தவரும் அரசியலுடன் தொடர்பில்லாதவை என்று எந்தச் சிறுபிள்ளையும் கூறிவிடாது.

இந்தியாவிலிருந்து - இலங்கைக்கான பெற்றோலிய விநியோகத்திற்கு - கொழும்புத் துறைமுகமே மிகவும் வாய்ப்பானதான சூழலில்,

பெற்றோலிய நுகர்வு - கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும், கட்டுநாயக்க விமானத்தளம், துறைமுகம் போன்ற பகுதிகளிலுமே மிக அதிகமாயிருக்கும் நிலையிலும் -

திருகோணமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களைப் பயன்படுத்த இந்தியா முனைவதானது மிகவும் எச்சரிக்கையுடனேயே நோக்கப்படவேண்டியதாகின்றது.

இவ்வாறான நிலையில் - இத்தனை சந்தேகங்களையும், அச்சுறுத்தல்களையும் புறந்தள்ளிவிட்டு, எண்ணெய்க் குதங் களை இந்தியாவிற்குக் குத்தகைக்கு விடவேண்டுமென பிடிவாதமாக நிற்பதாயின் - அது அத்தனை சந்தேகங்களையும், அச்சுறுத்தல்களையும் வலுப்படுத்தவே செய்யும் என்பதை அரசாங்கம் அறிய வேண்டும்.

இவ்வாறானதொரு முயற்சி, தமிழர் தரப்பில் கடுமையான எதிர்ப்பையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கையினையே - திருமலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எடுத்துச் சொல்கின்றன என்பதையும் அரசாங்கம் உடனடியாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## கந்தரோடையில் விகாரை அமைப்பது

# ஒப்பந்த மீறல் மட்டுமன்றி மனித உரிமை மீறலுமாகும்

## வலி.தெற்கு பொது அமைப்புக்கள் பிரதமருக்கு மகஜர்

புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், இராணுவத்தினரின் பாதுகாப்புடன் விகாரை ஒன்று அமைக்கப்படுவது- புரிந்துணர்வு உடன்பாட்டு மீறல் மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமை மீறலுமாகும் என வலி.தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கந்தரோடையில் விகாரை அமைக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட நேற்றைய பேரணியின் முடிவில் கையளிக்கப்பட்ட இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும், போரிட்டுக்கொண்டிருக்கும் இரு இனங்களையும் ஒற்றுமையாக்கி சமாதானத்தைக் கொண்டுவருவதற்காகவுமே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன் காரணமாகச் சமத்துவமான, சந்தோஷமான சூழல் ஒன்று உருவாகும் என்று நாமும் அங்கலாய்ப்புடன் காத்திருக்கின்றோம்.

ஆனால் - படையினரும், சமாதானத்திற்கு எதிரான சில தீய சக்திகளும் இணைந்து, சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனைத் தாங்கள் அறிவீர்கள்.

இதில் ஒன்றாக எமது பிரதேசத்திலுள்ள கந்தரோடைப் பகுதியில் புதிதாக ஒரு புத்தவிகாரை அமைக்கப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இங்கு புதைபொருள் ஆராய்ச்சி நடைபெற்று ஒரு முடிவு எட்டப்படாத நிலையில், இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் எழுதப்பட்ட பின், இராணுவத்தினரின் பாதுகாப்புடன் விகாரை ஒன்று அமைக்கப்படுவது புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் மட்டுமல்ல, அடிப்படை மனித உரிமை மீறலுமாகும்.

நாங்கள் புத்த மதத்திற்கு எதிரானவர்கள் அல்ல, அல்லது சிங்கள இனத்திற்கு விரோதிகளும் அல்ல. இன்று ஸ்ரீலங்கா இராணுவம் முகாம் அமைத்துள்ள இடங்களிலும், அரச மரம் முளைக்கின்ற இடங்களிலும் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு, அவை புராதன வழிபாட்டுத்தலங்கள் என்று கூறுவதுதான் எமக்கு வியப்பாகவும், வேதனையாகவும் உள்ளது.

இப்படியான நடவடிக்கைகள் தொடர்வதனால் எமது மக்களின் மனங்களில் அரசின் மீதும், அரசின் சமாதான நடவடிக்கைகள் மீதும்' சந்தேகப்பட வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

எனவே, மேலே எம்மால் கூறப்பட்ட விடயத்தினைக் கருத்திற்கொண்டு, ஸ்ரீலங்காவில் இரு இனங்களுக்கும் இடையில் ஒரு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்வரை இப்படியாகப் புதிதுபுதிதாகப் புத்த விகாரைகள் அமைக்கும் நடவடிக்கைகளை நிறுத்தி, எமது மக்கள் எதிர்பார்க்கும் சமத்துவமான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த உதவுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அம்பாறை மாவட்டத்தில் அமெரிக்க எதிர்ப்பு தினம்

அம்பாறை மாவட்டத்தில நாளை வெள்ளிக்கிழமை முஸ்லிம் பிரதேசங்களில் அமெரிக்க எதிர்ப்புத் தினமாக முஸ்லிம் காங்கிரஸ் பிரகடனப்படுத்தியுள்ளது.

இது தொடர்பாகத் திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் அறிவித்தல்களை விடுத்துள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கரையோரத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதெனவும், பள்ளிவாசலில் நடைபெறும் குத்பா பிரசங்கம் அனைத்தும் அமெரிக்காவுக்கு எதிரான பிரசங்கங்களாக இருக்கும் என்றும், ஈராக் மக்களுக்கான விசேட பிராத்தனைகள நடத்தப்படும் என்றும் அவாகள் தெரிவித்துள்ளனர்.

## குடித்தொகைச் சங்கத்தின் அதிதி விரிவுரை பல்கலையில்

இலங்கைக் குடித்தொகைச் சங்கம் நடத்தும் அதிதி விரிவுரையில், "வடக்கு-கிழக்கு மாகாணங்களில் குடித்தொகையைத் தீர்மானித்தல்" என்னும் கருத்துரையை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்தவுள்ளார்.

புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா.குகபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வு, இன்று பி.ப. 2 மணிக்குப் பல்கலைக்கழகப் புவியியற்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு இலங்கைக் குடித்தொகைச் சங்கத்தலைவர் பேராசிரியர் கே.ஏ.பி.சித்தசேன அழைப்பு விடுத்துள்ளார்.

# முற்போக்கு மகளிரணியின் ஏற்பாட்டில் கல்முனையில் கறுப்புப்பட்டிப் பேரணி

(கல்முனை நிருபர்)

மானிப்பாயில் இடுப்புப்பட்டி அணிந்து சென்ற பெண் புலிகள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும், சமாதானத்தைக் குழப்பிவிடத் திட்டமிட்டுச் செயற்பட்டு வரும் சக்திகளையும் கண்டித்து கல்முனையில் மகளிரின் கறுப்புப் பட்டிப் பேரணி நேற்றுக்காலை இடம்பெற்றது.

கல்முனை முற்போக்கு மகளிர் அணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில, கறுப்புப்பட்டிகள் அணிந்தவாறு பெருந்தொயையான மகளிர் கலந்துகொண்டனர்.

கல்முனை முற்போக்கு மகளிர் அணியின் தலைவி திருமதி யோகா கனகசபை தலைமையில், கல்முனை வாடி வீட்டுச் சந்தியிலிருந்து ஆரம்பமான இக்கறுப்புப்பட்டிப் பேரணி கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் வரை சென்றது.

"வீரத்தமிழ்த் தாய்க்குலத்தை வீம்புக்கு இழுக்காதே" - "மகளிர் உரிமையை மதி", - "மட்டக்களப்பில் வரவேற்புப் பலகை - மானிப்பாயில் இடுப்புப்பட்டி" - "மகளிர் வேண்டுவது சமாதானமே" - "சமாதானப் போர்வையில் தமிழினத்தை மிதிக்காதே" - என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளைப் பேரணியில் கலந்துகொண்ட மகளிர் ஏந்தியிருந்தனர்.

பேரணியின் இறுதியில் பிரதமருக்கு அனுப்பி வைப்பதற்கெனக் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலாளர் வீ.அழகரத்தினத்திடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

போர் நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினரை ஆத்திரமூட்டும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சமாதான சூழ்நிலைக்குக் குந்தகம் விளைவிக்க முயலும் தீய சக்திகளின் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 2200 பேர் காணாமற்போனதை செஞ்சிலுவை உறுதிப்படுத்தியது

கடந்த 12 வருட காலப் போரில் காணாமற்போனதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவிடம் செய்யப்பட்ட 20 ஆயிரம் புகார்களில், 2200 பேர் காணாமற் போனது உறுதியாகியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்திடம் செய்யப்பட்ட புகாரில் இதுவரையில் 11 ஆயிரம் புகார்கள் தொடர்பாக ஆராயப்பட்டதில் 2200 பேர் காணாமற்போனமை கண்டறியப்பட்டிருக்கிறது.

இதேவேளை 8200 பேர் தொடர்பான விசாரணைகளை செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இத்தகவலை செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் சுகுமார் றொக்வூட் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், பாதுகாப்பு அமைச்சு இக்காலபபகுதியில் 3736 படையினர் காணாமற் போனதாக அறிவித்திருந்தது. இவற்றில் 3352 இராணுவத்தினரும் 342 கடற்படையினரும் ஆறு பொலிஸாரும் 36 பேர் ஏனையவர்கள் ஆகும்.

இதேவேளை, புலிகள் தமது தரப்பில் காணாமற்போனோர் தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அறிவிக்கவில்லை என்றும் றொக்வூட் தெரிவித்தார்.

இதனிடையே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஜெனவாவில் நேற்று முதல் காணாமற் போனோர் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரதி செவ்வாய்க்கிழமை தோறும் தென்மராட்சியில் நடமாடும் சேவை

தென்மராட்சிப் பிரதேச செயலகம் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் ஒவ்வோர் பகுதியில் இச்சேவை இடம்பெறும். கடந்த செவ்வாயன்று கொடிகாமத்திலுள்ள சாவகச்சேரிப் பிரதேசசபைக் கட்டடத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் பத்மநாதன் இச்சேவையை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச செயலகத்தின் சகல திணைக்களங்களும் இந் நடமாடும் சேவையில் உள்ளடக்கப்படும். அடுத்த செவ்வாய்க் கிழமை மட்டுவில் பகுதியில் இச்சேவை இடம்பெறும் எனத் தென்மராட்சிப் பிரதேசசெயலர் கே.கேதீஸ்வரன் தெரிவித்தார். (25)

## விக்கிரகங்கள், வாகனங்கள் கட்டுவன் மேற்கில் திருட்டு!

கட்டுவன் மேற்கு,சோழங்கராஜன் தோட்ட விக்ன விநாயகர் ஆலயத்திலுள்ள விக்கிரகங்களும், வாகனங்களும். திருடப்பட்டதாகச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுவன் மேற்கு பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட மக்கள்- விக்ன விநாயகர் ஆலயத்தினைச் சென்று பார்வையிட்டபோது, நாகதம்பிரான், வைரவர், பெருச்சாளி விக்கிரகங்களும், குதிரை வாகனம், ஆதிமூலக்கலசம் என்பன திருடபபட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (78)

# வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி!

(சென்றவாரத் தொடர்ச்சி)

இவற்றைவிட நாணய ஆதாரமென்று பார்க்கும்போது - சுடுமண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும், வட்டமானதுமான நாணய வகைகள் எமக்குக் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்ட வடிவமானதும், சதுரமானதும், சற்சதுரமானதுமான நாணயங்கள் கந்தரோடை நகரத்தின் புராதனத் தன்மையை வெளிப்படுத்துவதாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம். ஏனென்றால் சுடுமண் நாணயங்களினுடைய உபயோகமானது, உலோக நாணயங்களின் பரிமாற்றம் அல்லது உபயோகம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக இருந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. எனவே



சமாதி புத்தர் சிலை (பக்கத் தோற்றம்)

நாணய ஆதாரங்கள் மூலம் கந்தரோடை என்ற புராதன நகரினுடைய தோற்றத்தைக் காலவரையறை செய்ய முடியுமென்பது எனது திடமான நம்பிக்கை. குறிப்பாகச் சுடுமண் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த நாணயங்களை வெப்பவியக்கவியல் முறைக்கு உட்படுத்துவோமானால் கந்தரோடையினுடைய நகர உருவாக்கத்தின் தொடக்கத்தினை நன்கு கண்டுகொள்ள முடியும்.



சமாதி புத்தர் சிலை (முற்பக்கத் தோற்றம்)

இதுவரையிலும் கந்தரோடை என்ற தொல்லியல் மையத்தின் வரலாற்றுச் சிறப்பினை மிகவும் சுருக்கமாக நோக்கிவந்த இப்பகுதி வாசகர்களுக்கு, ஓர் ஆய்வாளன் என்ற வகையில் சில கோரிக்கைகளை முன்வைத்து விடைபெற விரும்புகின்றேன். அதாவது தொடர்ச்சியான வகையில் ஈழத்தில் -தமது பண்பாட்டு வாழ்க்கை முறையினைப் பேணி வந்திருந்த ஈழத்தமிழர் - தமது வரலாற்றுத் தொடர்ச்சியைப் பதிவேடுகளிலோ அல்லது ஆவணங்களிலோ பேணி வைத்திருக்காமைக்கான அடிப்படைக் காரணிகள் என்ன?

வாசகர்களாகிய நாமுட்பட - தமிழர் மூதாதையர்கள் வரலாற்று உணர்வு அற்றவர்களாக வாழ்ந்து விட்டிருந்தனரா என்பது முதலாவது வினாவாக அமைகின்றது.

இரண்டாவது நிலையில் - கந்தரோடை என்ற இப்புராதனப்பதியின் பண்பாட்டுச்சுவடுகள் எந்தெந்த காலகட்டங்களினூடாக மனிதகுலத்திற்கு வளத்தினைச் சேர்த்திருந்தன; அதன் புதைமண்படை அடுக்குகள் (Buried Strata) எந்தெந்த மொழி மூலத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சியை ஈழத்தவர் தொடர்பாக வெளிப்படுத்தியுள்ளன? என்பன அவ்வினாக்களாகும். இந்த இரண்டு வினாக்களுக்கும் இப்பகுதியின் வாசகர்களாகிய நீங்களே பதிலளிக்கவும் கடமைப்பட்டுள்ளீர்கள்.

முதலாவது பிரச்சினையைப் பொறுத்தமட்டில் - ஈழத்தமிழரின் பணபாட்டு வரலாறு தொடர்ச்சியற்ற முறையில், அதாவது தனித்துவமான வகையில் பேணப்படாதிருந்தமைக்குரிய முக்கியமான காரணி, பௌத்தமத வாழ்வு முறையுடன் தமிழ் மக்களுக்கிருந்த உரிமம் இடைக்காலத்தின் பின்னர் விலகிச் சென்றமையே ஆகும்.

அதாவது, பௌத்தமத வாழ்வுடன் காணப்பட்ட அவர்களது பிணைப்பு நீக்கப்பட்டிருந்தமையே என்று குறிப்பிடலாம். மகாயானப் பௌத்தமதக் கோட்பாடுகளுடனும், வாழ்க்கை முறையுடனும் பின்னிப் பிணைந்திருந்து வாழ்ந்திருந்த ஈழத்தமிழரின் மூதாதையரது வம்சாவளித் தொடர்ச்சியில் இடையீடு ஏற்பட்டமைக்குரிய சமூகவியற் காரணிகள் யாவை என்பதனை விளக்குவதற்குச் சமூகவியலாளர்கள் முன்வரவேண்டும். அப்போதுதான் பௌத்தத்திற்கும், ஈழத்தமிழரது வாழ்க்கைக்குமிடையேயான தொடர்புகள் துல்லியம்பெறும்.

தென்னிந்திய - ஈழத்தொடர்புகளைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப்படுத்திய முக்கியமான அலகுகளில் (Units) மகாயான பௌத்த மதமும் ஒன்றாகும் என்பதனை எவருமே மறைக்க முடியாது. சிலப்பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீரசோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன. தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள்கூட மகாயான பௌத்த சமயத்தினூடாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலையில், ஈழத்தமிழரது வாழ்க்கை பற்றிய இலக்கண - இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு நீங்கள் யாராவது சிந்தித்தது உண்டா? அவ்வாறு சிந்தித்திருந்தால் கந்தரோடையை உங்கள் சிந்தனையிலிருந்து நீங்கள் கைவிட்டிருக்கவே மாட்டீர்கள்.

ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கையிலுள்ள பாளி - பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத தேடிப பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டு விட்டது. அனுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப் பார்த்ததுபோல், அதே இலக்கியத்தினூடாக கந்தரோடையையும் நாம் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம்; இல்லை இல்லை பழக்கப்படுத்தப் பட்டுவிட்டோம் என்பதே யதார்த்தம். இந்நிலை ஒழியவேண்டும். பதிலாகச் சிலப்பதிகாரம், மணிமேகலையூடாகக் கந்தரோடையைப் பார்க்கப் பழகிக்கொள்ளுங்கள். அப்போதுதான் இழந்துபோன ஈழத் தமிழர் வரலாறு துலக்கம் பெறும். கபாடபுரம் கந்தரோடையாகிய செய்தியை மறந்து, கதிரகொட கந்தரோடையான செய்தியையே நீங்கள் உங்கள் கைகளில் தூக்கி வைத்துக்கொண்டு கந்தரோடைக்கு சிங்கள - பௌத்த சாயலையும் பூசி விட்டீர்கள் - பூசவைக்கப்பட்டு விட்டீர்கள். ஆனால், கந்தரோடையின் புதை மண்படையடுக்குகளை விஞ்ஞானரீதியில் உரித்துரித்து எடுத்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய மையமொன்றினைக் கந்தரோடை தாங்கியிருந்த முறைமையைக் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். **Sir** ஐராவதம் மகாதேவன்கூட கந்தரோடையின் படிமானத்தினுள் கபாடபுரத்தின் எச்சங்கள் புதையுண்டு போன வரன்முறையை மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றார். அவருடைய நம்பிக்கை வீண்போகாது என்பதனையே எமது அண்மைக் காலக் கண்டுபிடிப்புக்கள் கந்தரோடை தொடர்பான இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளன. கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் உதயமான தமிழ் வரிவடிவ முறைமை யொன்று கந்தரோடையிலிருந்து தமிழகத்துக்குப் பரவியிருந்த முறைமையை அண்மைக் காலங்களில் அங்கிருந்து மீட்டெடுக்கப்பட்ட பிராமி மட்கலச்



பாலகிருஷ்ணர் சிலை (முற்பக்கத் தோற்றம்)

சாசனங்கள் உறுதிப்படுத் தியுள்ளன. இச்செய்தி மிகவிரைவில் ஈழ-தமிழக வரலாற்றையே மாற்றியமைக்கவும் முற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாகதுவீபத்திற்கும் (நாகதீபம்-யாழ்ப்பாணக் குடாநாடு) நாகபட்டினத்திற்கும் இடையே இருந்த பண்பாட்டுத் தொடர்புகளை உறுதிப்படுத்தும் விதத்தில் எமக்குப் பணபாட்டுச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தககதாயுள்ள அம்சம் யாதெனில், சோழர்காலத் தமிழக - வட இலங்கை உறவுப்பாலத்தை மேலும் மெருகூட்டும் வகையில் எமக்குக் கிடைத்துள்ள ஒரு வெண்கலச் சமாதி



பாலகிருஷ்ணர் சிலை (பிற்பக்கத் தோற்றம்)

புத்தர் சிற்பம் என்றால் உங்களில் பலரும் ஆச்சரியம் அடைய நேரிடும். தங்கமுலாம் பூசப்பெற்ற அவ்வரிய பொக்கிஷமே மகாயான பௌத்தத்திற்கும் - ஈழத்தமிழருக்கும் இடையே இருந்திருக்கக்கூடிய இறுக்கமான தொடர்பிணைக் கந்தரோடையூடாக வெளிப்படுத்தியுள்ளது. இதுவே தமிழ்ப் பௌத்தத்தின் உச்சமான காலகட்டத்தில் கந்தரோடையைப் பிரதிநிதித்துவம் செய்த வரலாற்றுச் சின்னமாகவும் அமைந்தது என்றால் அது மிகையில்லை. இச்செய்திக்கும் பின்னராவது கந்தரோடையைத் தமிழ்ப் பௌத்தப் பாரம்பரியத்தின் ஒரு தொட்டிலாக இலங்கை வாழ் தமிழ்மக்களும் பாளி - பௌத்த - சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்வர் என நான் திடமாக நம்புகின்றேன். இதற்குப் பின்னும் கந்தரோடை மீதான அவநம்பிக்கை உங்களில் யாராவது ஒருவருக்கு ஏற்படும் பட்சத்தில் அவர் சித்த சுவாதீனம் அற்றவர் என்றே முடிவு கட்ட வேண்டும்.

**செ.கிருஷ்ணராசா**
சந்திப்பு -
**சாந்தகுமார்**

---

## எங்கே போகிறோம்...?

நேசன்

# கலையும் பொய்மையும்

கலை சத்தியமானது. ஒரு கலைஞன் ஆத்மசுத்தியத்தோடு உருவாக்குகின்ற - படைத்தளிக்கின்ற எந்தக் கலையிலும் அடிநாதமாக ஒரு உண்மை ஒலிக்கும - அந்த உண்மையே அக்கலையில் ஆழ்ந்துபோகின்ற கலைஞனையோ ரசிகனையோ இதய ஆழம்வரை தொடுகிறது, நெகிழ்த்துகிறது, சிந்திக்க வைக்கிறது, மெய்யுணர்ந்து சிலிர்க்க வைக்கிறது.

உன்னதமான சங்கீதம் மெய்மறக்கச் செய்வதாகச் சொல்கிறோமே - அது என்ன? அந்தச் சங்கீதத்தில் ஈடுபட்டு மனமொன்றிப் போகும் நமக்கெல்லாம் ஒரு கணத்தில் (அது எந்தக் கணம் என்று சம்பந்தப்பட்டவனுக்குத்தான் புரியும்.) ஒரு மெய்மறப்பு - ஒரு சுயஇழப்பு நிகழும். அதுதான் அந்த அனுபவத்தின் உச்சம். அது ரசனை! அது லயம்! அது ஆராதனை!

இந்த அனுபவம் எந்தக் கலையினூடாகவும் நிகழமுடியும் - ஒரு தேர்ந்த ஓவியனுடைய படைப்பு- ஒரு ஆழ்ந்த ரசிகனைத் தனது ஆழத்துக்கு அழைத்துப் போகமுடியும்.

ஒரு அற்புதமான கவிதை தான், சஞ்சரிக்கும் எல்லைகளுக்கு ஒரு வாசகனை இட்டுச்செல்ல முடியும். இந்தப் பணியை முழுக் கவிதையுமே செய்ய வேண்டுமென்பதும் இல்லை - ஓரிரு வரிகள் - சில சமயம் ஒரு வரி - இரண்டொரு சொற்களுக்குள் உறைந்திருக்கிற உணர்வு - சத்தியம் எமது மனசை ஆழம்வரை தொட்டு, அந்த மகானுபவத்தைத் தரமுடியும்.

இதுவேதான் ஒரு சிறுகதையில் ஒரு அரிய படைப்பில் நிகழ்கிறது. அன்ரன் செக்கோவ் எழுதிய சலிப்பு என்கிற சிறுகதை எழுபதுகளில் உபயோகத்திலிருந்த க.பொ.த (சா/த) வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் நல்ல சிறுகதைக்கு ஒரு எடுத்துக் காட்டாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது.

ஒரு மொழிபெயர்ப்புச் சிறுகதைதான் என்றாலும், அது சுமந்து நின்ற உள்ளுணர்வு- அது வாசகனுக்குள் விளைவித்த அதிர்வுகள் இப்போது நினைத்தாலும் மனதை நெகிழ்த்துகின்றன. காலத்துக்கும் மறக்க இயலாத ஒரு உன்னதமான படைப்பு அது.

இதுபோலத்தான் ஒரு சிறந்த நாடகத்தில், நாவலில், திரைப்படத்தில் எதிலெலலாம் கலைத்துவம் மிளிர்கிறதோ- அதிலெல்லாம் மேற்சொன்ன அனுபவம் சாத்தியமாகிறது.

ஜானகிராமனின் 'மோகமுள்ளிலும்', 'அம்மா வந்தாளிலும' - ஜெயகாந்தனின் 'ஒரு மனிதன ஒரு வீடு ஒரு உலகத்திலும' உலகப்புகழ்பெற்ற 'தாயிலும்' 'அன்னை வயலிலும்' ,'அன்னா கரினீனா'வினதும் நாம் பெற்ற உள்ளார்ந்த அனுபவங்கள் அந்தப் படைப்புக்களின் உள்நாதமாய் ஒளிர்ந்த உண்மை - அல்லது பொதுமனித உள்ளத்தின் ஒரு தேடலின் மையப்பொருள் சார்ந்தவைதான்.

அந்தப் பொது உணர்வனுபவம்தான்- கலைஞனையும், ரசிகனையும் சந்திக்க வைக்கிற பொதுமையம்.

நன்றாயிருக்கிறது - அனுபவத்தை மறக்க முடியவில்லை என்றெல்லாம் நாம் சொல்ல எத்தனிக்கின்ற அனுபவப் பேறுகள் இந்த அடையாளம் காணலின் வெளிப்பாடுதான்.

எல்லோருக்குள்ளும் இருக்கிற மனிதத்தன்மை - நேசம் - ஆன்மபலம் - எல்லாமே இத்தகைய கலையனுபவத்தினூடாகக் காணக் கிடைக்கும் தரிசனங்கள்தான்.

கலை தரும் இன்பமும், கலை வழி அடையும் பேறும் இவ்வாறிருக்க- இதே கலை வடிவங்களூடாக இன்று நாம் செய்து வருகின்ற காரியங்களைக் கொஞ்சம் மீள நினைத்தும் பார்க்கவேண்டும் எல்லோருமே. உன்னதமான கலையென்பது மனிதனுள் இருக்கின்ற உயர்வான குணங்களை மேம்படுத்தும் ஒரு சாதனம் - சாதாரணமான நிலையிலிருந்து - இழிந்த தரத்திலிருந்து மனிதனை மீட்டெடுக்கக் கலைகள் என்றுமே துணைபுரிகின்றன.

அதேபோல, மனிதனைக் கீழ் நிலைக்குக் கொண்டுபோகின்ற தரம் இறக்கிவிடுகின்ற நோக்குடன் கலையென்ற பெயரில் இன்று பார்க்கவும், படிக்கவும், கேட்கவும் கிடைக்கின்ற படைப்புக்கள் ஒரு மாயைக்குள் மனிதனை அடைத்து வைக்க முனைகின்றன. ஆறுதலாய் மகழ்ச்சியாய் இருக்க உதவுவதே கலையின் பணி என்ற கருத்தைக்கூடத் தவறாகப்புரிந்து கொண்டவர்கள், மனித மனத்தின் சிறுமைக் குறைகளுக்கு ஊக்கத்தீனி போடுகிற காரியத்தையே புரிகின்றனர்.

பாலியல் வக்கிரங்களையும், வன்முறைக் காட்சிகளையும் கொண்ட திரைப் படங்கள் மலிந்துவிட்டன - என்ற குற்றச்சாட்டை மட்டும் இன்று திரைப்படக் கலைமீது சுமத்திவிடமுடியாது. ரசிகர்களை மகிழ்விக்கும் நோக்கில் என்ற பெயரில் அப்படியான படங்கள் வெளிவருவது ஒரு புறமிருக்க, நல்ல படம் என்று நமது சராசரி ரசிகர்கள் பாராட்டும் தரத்தில் தயாரிக்கிறோம் என்ற பெயரில்கூட சினிமா என்கிற கலையைத் துஷ்பிரயோகம் செய்யும் கொடுமை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதேகாரியம் தொலைக்காட்சித் தொடர்களிலும் ஒரு தொற்றுநோயாய்ப் பரவியுள்ளது. நம்பமுடியாத - நிகழமுடியாத- இயல்பல்லாத சம்பவங்களையும், திருப்பங்களையும் கோவையாக்கி- ரசிகர்களை வாய்பிளந்திருக்க வைக்கவோ, குடம் கணக்கில் கண்ணீர் விட வைக்கவோ முனையும் காரியம் நிறையவே நடக்கிறது. குடும்ப உறவுகளின் இயல்புத்தன்மை கொச்சைப்படுத்தப்படுகிறது - வில்லத்தனம், பழிக்குப்பழி வாங்கும் காரியம், புராணகாலப் ஜாதிச் சபதங்கள் இவையெல்லாம் மீண்டும் ஆளில்லா ஊரில் மழைகண்ட பற்றைகளாய் அடர்ந்து, செழித்து, வளர்ந்து சூழலை இருள்சூழ வைக்கின்றன.

பொய்மை இத்தகைய படைப்புக்களைப் பெருந்திரையாய் மூடிக்கிடக்கிறது.

இயல்பல்லாத சூழல், இயல்பல்லாத மனிதர்களின் இயல்பல்லாத வாழ்க்கையை நாடகமாய் தொலைக்காட்சித் தொடராய்ச் சினிமாவாய்ப் பார்த்து நமது சிறிசுகள்கூட இப்படித்தான் இப்பழக்கத்தால் நிஜவாழ்வோ என்ற கற்பனையில் மிதக்கத் தொடங்கிவிட்டனர்.

கலையின் மெய்யான இயல்பை எடுத்துக்காட்டும் படைப்புக்கள் அதிகம் அதிகம் வரவேண்டும் - வாழ்வின் எல்லா அம்சங்களிலும் இன்று கவியத் தொடங்கிவிட்ட போலித்தனமும், பொய்மைத் தன்மையும் இனிவரும் சந்ததியால் உணரப்பட்டு- எது கலை என அவர்கள் கண்டறியுமாறு அவர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும் - நல்ல கலைகளைப் படைப்போர் அதனை அதிகமானவர்களின் பார்வைக்கு - அனுபவத்துக்குத் தருதல் அவசியமாகிறது.

இத்தகைய கலைசார்ந்த பணி ஆழமாகவும், அதிகமாகவும் நடைபெறுவது புத்துயிர் பெறவேண்டிய நம் தேசத்தின் தவிர்க்க இயலாத தேவையாகும்.

மீண்டும் சந்திப்போம்....

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எப்படி, எதுவரை....!



### மேற்கிந்தியத் தீவுகள்

*அணித்தலைவர்* - கார்ல் ஹூப்பர்.

*பயிற்றுநர்* - றொஜர் ஹார்பர்.

*குழு* - B :- தென்னாபிரிக்கா, இலங்கை, நியூசிலாந்து, பங்களாதேஷ், கென்யா, கனடா.

*பலம* - சர்வதேசத் தரம் வாய்ந்த அனுபவ மிக்க பிறைன் லாறா, கார்ல் ஹூப்பர், சந்தர்போல போன்ற துடுப்பாட்ட வீரர்கள் இருப்பது. அத்தோடு இளமை நிறைந்த நம்பிக்கை நட்சத்திரங்களான சர்வான், கிறிஸ் கைல் முதலிய வீரர்கள்.

*பலவீனம்* - அணியின் பநதுவீச்சுப் பலம். டிரேக்ஸின் சராசரிகள் பரவாயில்லையென்றாலும் வயது 33. மேலும், ஏழு வருடங்கள் தென்னாபிரிக்காவில் இருந்த பின் மீண்டும் அணிக்குள் நுழைந்திருப்பது. மேர்வின் டிலோன் 100 டெஸ்ட் விக்கெட்டுக்கள் எடுத்திருந்தாலும் சர்வதேச ரீதியில் முதல்தர வரிசையில் ஒருவராக இல்லை.

*ஒருநாள் தரம்* - நியூசிலாந்தை மேற்கிந்தியாவில் வைத்து வென்றவர்கள். இந்தியாவில் வைத்து இந்தியாவை 4 -3 என்று ODI இல் வென்றவர்கள். 2001 இல் தென்னாபிரிக்காவிடம் 5-2 என்று தோல்வி கண்டவர்கள். அவுஸ்திரேலியாவிடம் 6 - 2 என்று தோல்வி கண்டவர்கள்.

*கடந்த ஒரு நாள் உலகக் கிண்ணச்சாதனைகள்* - தொடக்கச் சுற்றுப் போட்டியான 75 மற்றும் 79 இல் இருதடவையும் கிண்ணம் வென்றவர்கள். 83 இல் இந்தியாவிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டவர்கள். 96 இல் அரை இறுதிவரை வந்தவர்கள். 99 இல் முதல் சுற்றிலேயே OUT.

*எதிர்வு கூறல்* - இரண்டாவது சுற்றுக்குள் செல்வது பெரும்பாலும் கஷ்டமாக இருக்கும்.

## யாருக்கு யார் சொந்தம்!

மழைவிட்டும் தூவானம் விடவில்லை. இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் தோற்றுப்போனதன் தூறல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இது இன்னொரு வகையான பதிலடி இந்திய வீரர்களுக்கு. அதாவது படுதோல்வியடைந்த இந்திய அணி வீரர்கள், எந்தெந்த வகையான வர்த்தகப் பொருட்களுக்கு விளம்பரங்களை அணிந்திருக்கிறார்களோ, அல்லது எந்தப் பொருட்களுக்காக "நடிக்கிறார்களோ" அந்தப் பொருட்களையெல்லாம் இந்திய மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோஷம் வலுத்து வருகின்றது.

இதுவே கங்கூலிக்கும் அவரின் அணி வீரர்களுக்கும் சரியான தண்டனையாக இருக்கும் என்று கோபமுற்ற ரசிகர்கள் நம்புகின்றார்கள்.

ஒரு கருத்துக்கணிப்பின்படி எண்பது வீதத்தினர் இந்த வகையான புறக்கணிப்பைச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இதேவேளை, SMS எனும் ஒரு நிறுவனம், செல்லிடத் தொலைபேசி வலைப்பின்னல் மூலம் இதே கருத்தை இந்தியா முழுவதும் பரப்பிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவைப் போன்ற பாரிய சந்தையைக் கொண்டுள்ள ஒரு நாட்டில் கனதியான வர்த்தகச் சந்தையைப் பிடித்துள்ள பொருட்கள், பகிஷ்கரிப்புக்கு உள்ளாகுமானால் அது பெரியதொரு தாக்கத்தை உருவாக்கும் என்று நம்பலாம்.

அதேவேளை, அதேயளவு பலத்தையும் சந்தை வாய்ப்பையும் கொண்டுள்ள பதிலீட்டுப் பொருட்களுக்கு வாய்ப்பாகத்தான் அமையும். கீரைக்கடைக்கு எதிர்ப்பு வந்தால் எதிர்க் கீரைக்கடைக்கு வியாபாரம் நன்றாக நடக்கும் என்பது உண்மைதான்.





சிம்பாப்வே ரசிகர்கள் கூட்டம் - தோல்விக்கு முன்.

இது ஒரு தற்காலிக கோபத்தின் வெளிப்பாட்டுச் செயற்பாடாக மட்டும்தான் இருக்கும். பெரிதாக யாரையும் வீழ்த்துப்போவதும் இல்லை. உயர்த்தப் போவதும் இல்லை. ஆனால், இனி விளம்பரங்களைப் பார்க்கம்போது கேலி உணர்வும் சேர்ந்தே வரும் என்பதும் உண்மை. செந்திலையும் கவுண்டமணியையும் பார்ப்பதுபோல கங்கூலியையும் அவரது அணியினரையும் பார்க்காமல் இருந்தால்போதும். ரசிகர்களுக்கு தில்மாங்கே More உம் ஒன்றுதான். தண்டா மத்லப்பும் ஒன்றுதான். ஷாருக்கானும் ஒன்றுதான். அமீர்கானும் ஒன்றுதான். FED UP!

## நான் உயர உயரப் போகிறேன்

நமீபியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ண ஒருநாள் போட்டியின்போது பாகிஸ்தானின் 'ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ்' சொஹைய்ப் அக்தார் உலக சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளார்.

நமீபியாவின் கீழ் வரிசையாட்டக்காரர் டாக்டர் வான்வியூரனுக்கு அவர் வீசிய பந்து 98.5 மைல்கள் வேகத்தைக் காட்டிநின்றது.

இதுவே உலகின் எச்சந்தர்ப்பத்திலும் வீசப்பட்ட உத்தியோகபூர்வமான அதிவேகப் பந்துவீச்சுவென ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இதேவேளை, முன்பதாக லாகூரில் நடைபெற்ற ODI ஒன்றில் நியூசிலாந்திற்கு எதிராக இவர் வீசிய பந்து, 100.04 மைல் வேகத்தைக் காட்டியது. ஆனால், உத்தியோகபூர்வமாக இது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதேவேளை, நமீபிய ஆட்டத்தில் தான் எடுத்த 4 விக்கெட்டுக்களைப் பற்றித்தான் முதன்மை கொடுத்து அக்தார் பேசுகிறார். அதோடு, அதிவேகப்பந்து வீச்சு ஒரு பிரச்சினை அல்ல என்றும் கூறுகிறார். இதற்கொரு காரணம் உண்டு. இவருக்குப் போட்டியாக இன்றைய கிரிக்கெட் உலகில் வேகமாகப் பந்து வீசக்கூடிய ஒரேயொரு நபர் அவுஸ்திரேலியாவின் பிரெட் லீ மட்டும்தான் இவர்கள் இருவருக்கும் இடையில் ஒரு பனிப்போர் இருந்தாலும், லீ கூட உலகக்கிண்ணப் போட்டிகளில் விக்கெட் கவிழ்ப்பது முக்கியமே தவிர, வேகம் முக்கியம் அல்ல என்று கூறியிருந்தார். ஆனால், உலகம் யார் அதிவேகமானவர் என்று எதிர்பார்த்துத்தான் இருக்கிறது.



100 மீற்றர் பெண்கள் ஓட்டத்தின் மகியன் ஜோன்ஸ். 100 மீற்றர் ஆண்கள் ஓட்டத்தில் ரிம் மொண்ட்கொமரி. அதேபோன்ற முக்கியத்துவத்துடன் 100 MPH ஐ அடையத்துடிக்கும் சொஹைய்ப் அக்தார், விளையாட்டு உலகம் உயர உயரப் போய்க் கொண்டு இருக்கிறது. ஆனால், இரசிகர்களின் ஒரு பகுதி வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டமும், பதாகை எரித்தல், படம் கிழித்தல், படம் எடுத்தல் என்று வலு Bussy யாக இருக்கிறது. Shame Utter Shame.

## நேற்றைய ஆட்டங்களிலிருந்து...


டெண்டுல்கர் - யாமிருக்கப் பயமேன்


டிரெஸ்கொதிக் - ஜெரி ஸ்நைமன் பேசிக்கொள்கிறார்களா...?

## நாளும் ஒரு வினா

இதுவரையில் அதிக தடவைகள் உலகக்கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டிகளை அரங்கேற்றிய மைதானம் எது?

லோர்ட்ஸ் மைதானம் - இங்கிலாந்து

1975 - 1979 1983- 1999

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இந்தியா எதிர் சிம்பாப்வே அணி

#### இந்தியா அணி

| | | |
|---|---|---|
| ஷேவாக் | C டைபூ b விட்டல் | 36 |
| டெண்டுல்கர் | b வி. பிளவர் | 81 |
| மொங்கியா | C ஹொண்டோ b வி. பிளவர் | 12 |
| கங்கூலி | C ஸ்ரீக் b பிலிக்நோட் | 24 |
| டிராவிட் | not out | 43 |
| யுவ்ராஜ்சிங் | C டைபூ b மேர்பி | 01 |
| கைஃப் | LBW b ஹொண்டோ | 25 |
| ஹர்பஜன் சிங் | C மேர்பி b ஸ்ரீக் | 03 |
| ஷாஹீர் கான் | not out | 13 |
| உதிரிகள் | 17 | |
| மொத்தம் 7/255 (50 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - சிம்பாப்வே அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஸ்ரீக் | 9 | 0 | 46 | 1 |
| பிலிக்நோட் | 10 | 0 | 54 | 1 |
| ஹொண்டோ | 9 | 1 | 56 | 1 |
| விட்டல் | 6 | 0 | 37 | 1 |
| வி. பிளவர் | 6 | 0 | 14 | 2 |
| மேர்பி | 10 | 0 | 40 | 1 |

இந்திய அணி சிம்பாப்வே அணியை 83 ஓட்டங்களால் வெற்றி கண்டது. ஆட்டநாயகன் சச்சின் டெண்டுல்கர்

#### சிம்பாப்வே அணி

| | | |
|---|---|---|
| விஷாட் | b சிறிநாத் | 12 |
| வேர்மியூலன் | C டிராவிட் b சிறிநாத் | 00 |
| அ. பிளவர் | b ஹர்பஜன்சிங் | 22 |
| வி. பிளவர் | C ஹர்பஜன்சிங் b கங்கூலி | 23 |
| இப்ராஹீம் | C Sub b கங்கூலி | 19 |
| பிலிக்நோட் | C மொங்கியா b கங்கூலி | 02 |
| டைபூ | Not out | 29 |
| விட்டல் | C ஹான் b ஷேவாக் | 28 |
| ஸ்ரீக் | C கைஃப் b ஹர்பஜன்சிங் | 20 |
| மேர்பி | b கான் | 02 |
| ஹொண்டோ | b கான் | 02 |
| உதிரிகள் | 13 | |
| மொத்தம் 172 (44.4 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு -இந்திய அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சிறிநாத் | 8 | 1 | 14 | 2 |
| கான் | 7.4 | 0 | 23 | 2 |
| நேஹ்ரா | 7 | 0 | 35 | 0 |
| ஹர்பஜன்சிங் | 10 | 0 | 42 | 2 |
| கங்கூலி | 5 | 1 | 22 | 3 |
| ஷேவாக் | 3 | 0 | 14 | 1 |
| மொங்கியா | 4 | 0 | 16 | 0 |

### இலங்கை எதிர் கனடா அணி

#### கனடா அணி

| | | |
|---|---|---|
| சம்னி | C சங்ககார b வாஸ் | 9 |
| டேவிசன் | C சங்ககார b நிஸங்க | 0 |
| சத்தார் | LBW b வாஸ் | 0 |
| பில்கிளீவ் | LBW b வாஸ் | 1 |
| டி குரூட் | LBW b நிஸங்க | 0 |
| ஹரிஸ் | Hit Wicket b நிஸங்க | 9 |
| மராஜ் | LBW b நிஸங்க | 0 |
| பகாய் | C ஜயவர்த்தன b பர்ணாந்து | 6 |
| சஞ்சயன் | LBW b பர்ணாந்து | 6 |
| கொட்ரிங்டன் | b முரளிதரன் | 0 |
| சீபாரன் | Not out | 0 |
| உதிரிகள் | 05 | |
| மொத்தம் 36 (18.4 ஓவர்கள்) | | |

#### பந்து வீச்சு - இலங்கை அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| வாஸ் | 7 | 4 | 15 | 3 |
| நிஸங்க | 7 | 1 | 12 | 4 |
| முரளிதரன் | 2.4 | 0 | 3 | 1 |
| பெர்ணான்டோ | 2 | 0 | 4 | 2 |

#### இலங்கை அணி

| | | |
|---|---|---|
| அத்தப்பத்து | Not out | 24 |
| ஜயசூரிய | LBW b சஞ்சயன் | 09 |
| சங்கக்கார | b Not out | 04 |
| உதிரிகள் | 0 | |
| மொத்தம் 1/37 (4.4 ஓவர்கள்) | | |

#### பந்துவீச்சு - கனடா அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சஞ்சயன் | 2.4 | 0 | 22 | 1 |
| டேவிசன் | 2 | 0 | 15 | 0 |

இலங்கை அணி, கனடா அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகன் நிஸங்க.

### நேற்று நடந்த மூன்றாவது ஆட்டம்

இங்கிலாந்து அணி நமீபிய அணியை 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டது.
ஓட்டவிபரம்.
இங்கிலாந்து 272 (50 ஓவர்கள்)
நமீபியா 9/217 (50 ஓவர்கள்)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மாகாண அதிகாரிகளுக்கு இந்திய அதிகாரிகள் பயிற்சி

(திருகோணமலை)

வட - கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகளுக்கு இந்திய அதிகாரிகள் மூலமாக விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் முகாமைத்துவம் உலக வங்கியின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான தற்கால நடைமுறைகள் போன்ற விடயங்களிலேயே இவ்விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது. நான்கு கட்டங்களாக வழங்கப்படவிருக்கும் இப்பயிற்சியின் போது பல மட்டங்களிலும் உள்ள சுமார் இருநூறு உத்தியோகத்தர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உயர்மட்ட அதிகாரிகள், நிர்வாக சேவை அதிகாரிகள், பதவிநிலை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கே இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காகவே உலகவங்கியின் உதவியுடன் இப்பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக வட - கிழக்கு மாகாண சபையின் மாகாணத் திட்டமிடல் செயலாளர் தெரிவித்தார்.

கடந்த திங்கள் திருமலை வந்த இந்திய ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான நாகராஜு மற்றும் ஏ.வர்ஷினி ஆகியோரே மேற்படி பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இவர்கள் இந்தியாவில் 'ரிரைஸ்' என்ற நிறுவனத்தின் ஆலோசகர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### இன்றைய ஆட்டம்

ICC Cricket World Cup South Africa 2003

அவுஸ்திரேலியா Vs நெதர்லாந்து - North West Stadium, Potchefstroom - 2 pm.

# மட்டக்களப்பிலும் ஆர்ப்பாட்டப் பேரணி




மானிபபாயில் பெண் போராளிகளும், பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் படையினராலும், ஈ.பி.டி.பி.யினராலும் தாக்கப்பட்டதைக் கண்டித்து - மட்டக்களப்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெற்றது.

இப்பேரணி - மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி, காந்தி சதுக்கத்தைச் சென்றடைந்தது. நேறறு இப்பேரணி நடைபெற்றபோது மட்டக்களப்பு நகரம் முழுவதும் ஸ்தம்பிதமடைந்தது.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் உட்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இப்பேரணியில் பங்குபற்றினர்.

# சனியன்று காலை ஹர்த்தால் மனிதநேய அமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை மறுதினம் சனி காலை 10.00 மணிவரையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நேற்று, மனிதநேய அமைப்பினர் நடாத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி அன்றைய தினம் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் தமிழ் மக்களுக்கு பெரிதாக நிம்மதியான வாழ்வு கிடைத்து விடவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள மனிதநேய அமைப்பினர், இக் காலப்பகுதியில் அரச படைகள் பொது மக்கள் மீது நெல்லியடி, மானிப்பாய் மற்றும் பல இடங்களில் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்தியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவற்றுக்கு ஆட்சேபம் தெரிவிதது, சனி காலை 10.00 மணி வரை ஹர்த்தால் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதற்கு ஒத்துழைப்புத் தரும்படியும் மனிதநேய அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### உயர்மட்ட...

கடற்படைகளின் கூட்டு ரோந்தை பலப்படுத்துவது குறித்து முக்கியமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் நெடுந்தீவுக் கடலில் நடைபெற்ற சம்பவம் - இலங்கை கடற்பகுதியினுள் இந்திய மீனவர் அத்துமீறி நுழைந்து மீன் பிடிப்பது தொடர்பாகவும் இலங்கை - இந்திய கடற்படை அதிகாரிகள் ஆராயவுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்திலும் தொடராது தடுப்பது எவ்வாறு என்பது குறித்து இந்த உயர்மட்டச் சந்திப்பில் திட்டங்கள் வகுக்கப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (01)

### கந்தரோடையில்...

தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வலி - வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவருமான சிவமகாராஜா, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சொலமன் சிறில் ஆகியோர் உரையாற்றினர்

பின்னர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்றினை, சிவமகாராஜா வலி-தெற்கு பிரதேச செயலர் ஜெயப்பிரகாஸிடம் கையளித்தார். (லி)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.60 | 97.02 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 156.77 | 158.05 |
| 1 யூரோ | 103.40 | 104.32 |
| 1 சுவிஸ் பிராங் | 70.07 | 71.31 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.57 | 57.37 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆடியபாதம் சந்தியில் கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில், முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற இந்த விபத்தில், செட்டித்தெரு வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை துரைராஜா (வயது 53) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ச)

## புதிய ஓய்வூதிய திட்ட நடைமுறை

(கொழும்பு)

புதிய ஓய்வூதியத் திட்ட நடைமுறை இந்த வருட ஜனவரி மாதம்

அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஊழியர்களின் சம்பளத்தில் எட்டு வீதமும், அரச தரப்பிலிருந்து 12 வீதமும் ஓய்வூதியத்துக்கு செலுத்தப்படவுள்ளது.

எதிர்காலத்தில் அரச ஊழியர்கள் 30 வருட கால சேவைபுரிந்தாலே முழு ஓய்வூதியம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இலவச பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை முகாம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசேவை, எதிர்வரும் 28 ஆம் திகதிவரை யாழ். வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

இலங்கை, ஜேர்மன் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இந்த மருத்துவ சேவையின் கீழ் "இன்ரக் காஸ்ட் யூ.கே" என்ற நிறுவனத்தின் வைத்திய நிபுணர்கள் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை அளித்து வருகின்றனர். (ச)

### முன்னாள்...

தலைக்கவசம் தூக்கியெறியப்பட்டதால், தலையில் படுகாயமடைந்த நிலையில் அவர் சம்பவ இடத்திலேயே மரணமுற்றார்.

வலி.வடக்கு உதவி அரச அதிபராகவும், சங்கானை பிரதேச செயலராகவும் கடமையாற்றி ஓய்வுபெற்ற இவர், தற்போது அகதிகளுக்கான ஐ.நா. முகவரகத்தில் நுண்கருத்திட்ட இணைப்பாளராகக் கடமையாற்றி வந்தார். 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இவர் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராகவும் போட்டியிட்டார்.

இவரின் மறைவுச் செய்திகேட்டு பல பொது அமைப்புக்களும் தமது அஞ்சலிச் செய்திகளை வெளியிட்டுள்ளன. மூத்த சிவில் அதிகாரியான சந்திரராசாவின் அகால மரணத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிப்பதோடு, அவருக்கு இதய பூர்வ அஞ்சலிகளை சமர்ப்பிப்பதாக தெல்லிப்பளை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.சிவமகாராஜா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மறைந்த நூலக திறப்புகள் நேற்று முன்புற வீதியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது நூலகத்தில் அண்மையில் இனந்தெரியாத நபர்களினால் அபகரித்துச் செல்லப்பட்ட திறப்புக் கோர்வை, நேற்று பொதுநூலக முன் வீதியில் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டு யாழ். நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பொது நூலக முன் வீதியில் கண்டெடுத்த திறப்புக் கோர்வையை பொலிஸார் யாழ். நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

இத் திறப்புக் கோர்வையை பொறுப்பேற்குமாறு, யாழ். மாநகர சபை ஆணையாளர் இராமலிங்கத்திடம் சென்று தெரிவிக்கும்படி யாழ். நீதிவான் விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அண்மையில் யாழ். பொது நூலக களஞ்சிய அறையை உடைத்து உள்ளே சென்ற இனந்தெரியாத நபர்கள் அங்கிருந்த திறப்புக் கோர்வையையும் அபகரித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (லி)

# மண்டபம் அகதி முகாமில் இளைஞரின் சிதைந்த உடல்

(சென்னை)

தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகள் பெருமளவில் தங்கியிருக்கும் - மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள கிணறொன்றிலிருந்து 17 வயதுடைய இளைஞனொருவனின் சிதைந்த உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இச்சடலம் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமில் பதற்றம் நிலவி வருகிறது.

முகாமுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரும் கிணறிலிருந்தே இச்சடலம் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட இளைஞரின் விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை என தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஜப்பானிய வெளியுறவு குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் ஐவர் கொண்ட குழுவொன்று இரண்டு நாள் விஜயமாக இன்று யாழ்ப்பாணம் வருகிறது. இக் குழுவினர் இன்று யாழ்.செயலகத்தில் யாழ். வர்த்தக சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

ஜப்பானியக் குழுவினர் யாழ்ப்பாண அரச அதிபர், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பேராசிரியர்களையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழில் அபிவிருத்தி குறித்து மீனவ சங்கப் பிரதிநிதிகளுடனும் ஜப்பானியக் குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

# ஆசிரியருக்கு அனுமதி மறுப்பு

வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பாடசாலை ஆசிரியர் ஒருவரை நேற்று முகமாலைச் சோதனைச் சாவடியில் உள்ள இராணுவத்தினர், அவர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதி மறுத்துள்ளனர்.

அவர் ஒரு புலிகள் இயக்க உறுப்பினர் என்று தவறான காரணம் காட்டியே படையினர் அவருக்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### இரத்தினம் மாணிக்கம்

மறவன்புலோவை பிறப்பிடமாகவும், தற்பொழுது கைதடியில் வசித்து வந்தவராகிய இரத்தினம் மாணிக்கம் நேற்று 19.02.2003 புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் காலமானார். இவர் சிவபதமடைந்த இரத்தினம் மாணிக்கவாசகர் அவரின் தாயாரும் மற்றும் சடாச்சரம் (கனடா), சண்முகலிங்கம் (பிரான்ஸ்), நிர்மலாதேவி (நியூசிலாந்து), செல்வதேவி (கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சொர்ணலட்சுமி (சாவகச்சேரி), கலைச்செல்வி (கனடா), அமிர்தகுமாரி (பிரான்ஸ்), திருநாவுக்கரசு (நியூசிலாந்து), சிவலிங்கம் (கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பாலரஞ்சினி, கமலதாசன், சந்திரவதனி (சாவகச்சேரி), நாகதன்சா, சோபிகா, டர்சன் (கனடா), செந்துரு, அஜந்தன், கஜானன் (பிரான்ஸ்) ஆகியோரின் அப்பம்மாவும், யசோதரன், ஜீவன், தியகுஸ்தா (நியூசிலாந்து), யசிக்கா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

இவரின் இறுதிச் சடங்கு 20.02.2003 பி.ப 2 மணியளவில் கைதடி ஊத்தல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்
சி. செல்வதேவி
(மகள்)

(சி.604)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.02.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.